REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஜனவரி 11 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 09 | Wednesday 11, January, 2023 | 20பக்கங்கள் | 50/-

இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட

கனேடிய பிரஜையொருவர் விமான நிலையத்தில் மரணம்

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட கனேடிய பிரஜையொருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையப் பகுதியில் நேற்று (10) அதிகாலை திடீரென கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

விமான நிலையப் பொலிஸார் நேற்று இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். புத்திக கருணாரத்ன என்ற 54 வயது 06

திறைசேரியில் பெரும் நிதி நெருக்கடி

சம்பளம் வழங்குவதில் சிக்கல்கள் சமுர்த்தி கொடுப்பனவு தாமதமாகும்

லோரன்ஸ் செல்வநாயகம்

திறைசேரி, தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளாரென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது,

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது பெரும் சிக்கலாக அமைந்துள்ளது. இதனால், சமுர்த்தி கொடுப்பனவுகளும் இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்படலாம். இதற்கு மாற்றீடாக அனைத்து அமைச்சுக்களுக்கும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 06

17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் இ.தொ.கா. தலைவர் செந்தில் பங்கேற்பு

இந்தியாவில் நடைபெறும் 17ஆவது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் பங்கேற்றார்.

இம்மாநாடு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூரில் நேற்று முன்தினம் 09 ஆரம்பமாகி,நேற்று (10)இல் நிறைவு பெற்றது. இதில், கயானாவின் ஜனாதிபதி இஃப்ரான் அலி, சுரினாமின் ஜனாதிபதி சான் சந்தோகி, இலங்கை 06

சபரிமலைக்கு புறப்பட்டவர் விமான நிலையத்தில் கைது

பயணப் பொதிக்குள் தோட்டாக்கள் மீட்பு

சபரிமலை செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற ஒருவர், விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் பொதிக்குள், ரி56 துப்பாக்கி தோட்டாக்கள் இருந்ததால், சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் நிலையத்தில் இவர் ஒப்படைக்கப்பட்டதாக 06

உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

ஐ.தே.க., பொதுஜன பெரமுன இணைந்து போட்டியிட முடிவு

சில சபைகளில் தனித்து களமிறங்கவும் உடன்பாடு

அனைவரும் ஒரே குழுவாக செயற்படவும் இணக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் உள்ளூராட்சி சபைகளில் இணைந்தும், புரிந்துணர்வுடனும் போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (10) இரு கட்சிகளதும் முக்கியஸ்தர்கள் நடாத்திய பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன. இதுபற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பாலித ரங்கே பண்டார : ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளன.

நாம் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள இரு கட்சிகளினதும் முக்கியஸ்தர்கள் மற்றும் 06

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம்:

டொலரில் நட்டஈட்டை பெறுவதற்கு இணக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தினால் நாட்டில் கடல் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நட்டஈடுகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

கப்பல் உரிமையாளரான காப்புறுதி நிறுவனத்திடம் அமெரிக்க டொலர் மூலம் நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 06

பொதுநலவாய பாராளுமன்ற செயலாளர் நாயகம் வருகை

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் (CPA) செயலாளர் நாயகம் ஸ்டீபன் ட்விக் (Stephen Twigg) இன்று இலங்கை வரவுள்ளதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

செயலாளர் நாயகம் உள்ளிட்ட குழுவினரை பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் 06

ஹம்பாந்தோட்டையில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அனுமதி

லோரன்ஸ் செல்வநாயகம்

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் எரிபொருள் சுத்திகரிப்பு மற்றும் அதனோடு இணைந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மத்திய நிலையமொன்றை, ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட மேற்படி திட்டத்திற்காக, முதலீடுகளை மேற்கொள்வதற்கு வெளி நாட்டு முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பொருத்தமான முதலீட்டாளர்களை தெரிவுசெய்வதற்கான 06

துபாயிலிருந்து இலங்கை வர்த்தகர்களிடம்

05 கோடி ரூபா கப்பம் கோரி தொலைபேசியில் மிரட்டல்

தராவிட்டால் சுட்டுக்கொல்வதாகவும் அச்சுறுத்தல்

லோரன்ஸ் செல்வநாயகம்

துபாயிலுள்ள பாதாள உலகக் குழு நபரொருவர், கட்டுநாயக்க மற்றும் மினுவாங்கொடை பகுதியிலுள்ள வர்த்தகர்களுக்கு தொலைபேசி மூலம் கப்பம் கோரி, உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால், அந்நபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதை, பல வர்த்தகர்கள் தவிர்த்து வந்துள்ளதாகவும் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மகேஸ் என்ற பெயருடைய இந்த பாதாள உலக குற்றவாளி கட்டுநாயக்க சுப்பர் மார்க்கட் ஒன்றுக்குச் சொந்தமான உரிமையாளரின் மகனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு 05 கோடி ரூபாவை கப்பமாக கோரியதுடன் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் அந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சுப்பர் மார்க்கட் வர்த்தக நிலையத்தை மேற்படி வர்த்தகரும் அவரின் மகனும் இணைந்து நடத்திவருவதாக தெரியவருகிறது.

கப்பம் வழங்கப்படாததன் காரணத்தால் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கவிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய 06

ATM பண மோடி ஐவருக்கு மறியல்

லோரன்ஸ் செல்வநாயகம்

மிகச் சூசகமான முறையில் மூன்று ஏ.ரி.எம். இயந்திரங்களில் ரூபா 110 இலட்சத்துக்கும் அதிகமான நிதியை கொள்ளையடித்த பல்கேரியா, கனடா பிரஜைகள் உள்ளிட்ட ஐந்துபேரையும் எதிர்வரும் (23) வரை விளக்கமறியலில் 06

மின்சார கட்டணங்களில் திருத்தங்கள் செய்ய பொதுப்பயன்பாட்டு ஆணையகத்துக்கு அவகாசம்

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென்கிறார் அமைச்சர் பந்துல

லோரன்ஸ் செல்வநாயகம்

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள மின்கட்டண அதிகரிப்பில், திருத்தங்களை முன்வைக்க பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு விரும்பினால், அதனைச் சமர்ப்பிப்பதற்கு காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

திருத்தங்கள் ஏதாவது செய்யவேண்டுமானால் அதனை பெப்ரவரி மாதம் (15) அல்லது அதற்கு முன்னர் முன்வைக்க வேண்டும். மின் கட்டண அதிகரிப்பு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 06

மாணிக்கக் கல் பதித்த தாதுகோபுரம்

நூறு கோடி ரூபாவுக்கு விற்க முயன்ற இரண்டு பேர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

மாணிக்கக் கற்கள் பதித்த சிறிய தாது கோபுரமொன்றை நூறு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்றோரை விசேட பொலிஸ் செயலணியின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து தாதூ கோபுரத்தையும் கைப்பற்றியதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெயாங்கொடை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலே, இவர்கள் கைதாகினர்.

இவர்களிடமிருந்து விற்கப்படவிருந்த தாதுகோபுரமும் மீட்கப்பட்டது.

கொக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது மற்றும் 24 06

தேசிய பாதுகாப்பு சட்டமூல இறுதி அறிக்கை நீதியமைச்சரிடம் கையளிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான, தேசிய பாதுகாப்பு சட்டமூலம் நீதியமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதை, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணைத் தலைமையிலான நிபுணர் குழு தயாரித்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில், சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரத்தினம், நீதி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, சட்ட வரைஞர் திணைக்களத்தின் மேலதிக சட்ட வரைஞர் டி.டி. குலசேன, நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஹிரண்யரா பெரேரா, உதவிச் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

தினேஷ் ஷாப்டர் கொலை: 175 பேரிடம் விசாரணை

வாக்குமூலங்களில் தற்கொலை இல்லை என்பது உறுதியாகிறது

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் படுகொலை சம்பவம் தொடர்பில் இதுவரை 175 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும், அவரது மரணம் தற்கொலை அல்ல என்பது உறுதியாகியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தினேஷ் ஷாப்டரின் மரணம் எந்தவகையிலும் தற்கொலை சம்பவமல்ல.இதற்கான எந்த ஆதார அறிக்கைகளும் முன்வைக்கப்படவும் இல்லை. முன்வைக்கப்பட்டவற்றில் எந்தத் தகவலும் உறுதிப்படுத்தப்படவும் இல்லை. எனினும் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதுவரை 175 பேரிடம் வாக்குமூலங்கள் 06

மின் கட்டண திருத்தம் எதிர்காலத்தை பாதிக்காமல் அமைவது அவசியம்

பொது பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர்

லோரன்ஸ் செல்வநாயகம்

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள மின் கட்டணத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தம், எதிர்காலத்தை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மின் கட்டண திருத்தம் தொடர்பான யோசனைகள் நேற்றுமுன்தினமே தமக்கு கிடைத்துள்ளதாகவும் அதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 45 நாட்கள் தேவைப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று விசேட ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ள அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், மின்சார சபையினால் 06

மலையக தோட்ட தொழிலாளர்களின் 200 வருட வரலாறு:

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தொழில் உரிமை, பாதுகாப்பு

தொழிலமைச்சருடன் தொழிற்சங்கங்கள் கலந்துரையாடல்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மலையக பெருதோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவடைந்ததையடுத்து நடைமுறைப்படுத்தப் படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் இடையில் கொழும்பில் தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றது. எனவே, அவர்களின் தொழிற்துறையும் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கு என்று பல சட்ட ஏற்பாடுகள் காணப்பட்டாலும், அது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகள் குறைவு. அத்தோடு, தொழிலாளர்களுக்கு தொழில் திணைக்களங்களில் வழங்கப்படும் முக்கியத்துவங்கள் மிகவும் குறைவாகவே உள்ளது.

இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்களை பாதுகாக்கும் உரிமை சார்ந்த மற்றும் நலன்புரி சார்ந்த சட்ட மூலத்தை உருவாக்க வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தரப்பினர் மூலம் அமைச்சருக்கு யோசனை முன்வைக்கப்பட்டதாக அதன் உப தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அதுமட்டுமில்லாமல் ஏனைய தொழிற்சங்கங்கள், சமூக ஆர்வாலர்கள், சிவில் அமைப்புகள் அனைத்து தரப்பினரையும் இணைத்து இந்த 200 வருடத்தில் நாட்டிற்கு பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் அடையாளத்தை ஏற்படுத்திய பெருந்தோட்ட தொழிலாளர்களை கௌரவிக்கும் வகையிலான கருத்துகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், உப தலைவர் பாரத் அருள்சாமி, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மற்றும் ஒன்றிணைந்த மலையக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் கடமை பொறுப்பேற்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளராக நியமிக்கப்பட்ட மஹிந்த எஸ்.வீரசூரிய கடந்த(4) புதன்கிழமை சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத் தொகுதியில்சப்ரகமுவமாகாணஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்னிலையில் தமது கடமைகளை பொறுப் பேற்றார். இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் எச்.டி.சிசிர, கேகாலை மாவட்ட மேலதிக செயலாளர் திதிஷா எஸ்.ரத்னாயக்க உட்பட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மோ. சைக்கிளில் சென்றவர் மாரடைப்பால் மரணம்

(அக்குறணை குறூப் நிருபர்)

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் மாரடைப்பு காரணமாக மரணித்த சம்பவம் கம்பளை பகுதியில் (07) இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில், நாவலப்பிட்டியைச் சேர்ந்த மீரா சாயிப் மொஹமட் சாலி (வயது 62) என்பவரே மரணித்துள்ளார்.

மேற்படி நபர் தன்னுடைய மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் நாவலப்பிட்டியில் இருந்து வெலம்பொட என்ற இடத்தைநோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. வீதி விதிகளை மீறி மோட்டார் சைக்கிளை அவர் செழுத்தியதாகவும் அச்சமயம் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இருவர், அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளனர். மோட்டார் சைக்கிளை நிறுத்திய அவர், அந்நேரம் தனக்கு நெஞ்சு வலிப்பதாகவும் . மூச்செடுக்க கடினமாக இருப்பதாகவும் தெரிவித்ததாகவும் அவரது மனைவி தெரிவித்தார்.

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றில் உடன் ஏற்றப்பட்ட அவர் பொலிசாரின் உதவியுடன் கம்பளை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். எனினும், இடை நடுவில் அவர் மரணித்ததாகவும் பின்னர் தெரிய வந்துள்ளது.

CWCயின் தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறாது

பொதுச்செயலாளர் ஜீவன் MP தெரிவிப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தைப்பொங்கல் நிகழ்வுகள் இம்முறை இடம்பெறாது என அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் தைபொங்கல் நிகழ்விற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையை மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மலையக மக்களின் நிவாரண திட்டத்திற்கும் பயன்படுத்தபடும் எனவும் அவர் தெரிவித்தார். காலம் காலமாக காங்கிரஸ் ஒவ்வொரு தைப் பொங்கல் நிகழ்வினையும் மலையக பிரதேசங்களில் பொங்கல் விழா எனவும், உழவர் திருநாள் எனவும் சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். இம்முறை நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறாது என அவர் தெரிவித்தார்.

(ஆ.ரமேஸ்)

கண்டி மாவட்டத்தில் 9550 புதிய வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி

(எம்.ஏ.அமீனுல்லா)

இந்த ஆண்டு கண்டி மாவட்டத்தில் 9550 இளைஞர்கள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டின்படி, 18 வயதுக்குட்பட்ட இந்த குழு, தற்பொழுது புதிய வாக்காளர்களாக தகுதி பெற்றுள்ளதுடன், அதன்படி கண்டி மாவட்டத்தில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 11,68,697 ஆகும்.

கண்டி மாவட்டத்தில் உள்ள 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 368 பிரிவுகளில் இருந்து 377 வேட்பாளர்கள் இவ்வருட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 686 ஆகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கண்டி மாவட்டத்தில் தற்பொழுது கட்டுப் பணம் செலுத்தும் நடவடிக்கை கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வருவதுடன், நேற்று (10) வரை மூன்று சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. கண்டி மாவட்ட செயலாளரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான சந்தன தென்னகோனின் மேற்பார்வையில், கண்டி பிரதி தேர்தல் ஆணையாளர் கலாநிதி எச்.டி.என்.சம்பத் பெர்னாண்டோவின் பணிப்புரையின் கீழ் கட்டுப் பணவைப்பு நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

இருவேறு விபத்துகளில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரு வேறு இடங்களில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் பலியாகியுள்ளனர்.

அரனாயக மாவனல்ல வீதியில் அலுபொத்த என்ற இடத்தில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயத்துக்கு உள்ளான் 22 வயது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை பலாங்கொட வெள்ளய வீதியில் மதுருகெட்டிய என்ற இ டத்தில் டிராக்டர் ஒன்றுடன் மோட்டா ர் சைக்கிள் ஒன்று மோதியதில் 55 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணித்துள்ளார்.

பாதை புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தம்; மக்கள் விசனம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.

நோர்வூட் எரிபொருள் நிரப்பும் சந்தியில் இருந்து பொகவந்தலாவை பிரதான வீதிக்கு கார்ப்பட் இட்டு புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்தும் வீதி புனரமைப்பு பணிகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை என பொது மக்கள் மற்றும் சாரதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பல ஆண்டு காலமாக குண்டும் குழியுமாக காணப்பட்ட குறித்த வீதி கடந்த அரசாங்கத்தின் காலத்தின் போது வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2020.05.06 ம் திகதி 1250 ரூபா மில்லியன் ரூபா செலவில் நோர்வூட் தொடக்கம் கெம்பியன் வரை 6.5 மீற்றர் அகலப்படுத்தி புனரமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்த பணிகள் கொரோனா தொற்றும் மற்றும் மழை காரணமாக தாமதமடைந்தன. அதனை தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் இரண்டு வருடத்திற்கும் மேலாக கைவிடப்பட்டிருப்பதாகவும் இதனால் இன்று பலாங்கொட, பொகவந்தலாவை, டின்சின், கெம்பியன், ராணிக்காடு லொய்னோன், கேர்க்கஸ்வோல்ட், எலிப்பொட, சென்ஜோன்டிலரி உள்ளிட்ட தோட்டங்களையும் நகரங்களையும் சேர்ந்த பல இலட்சக்கணக்கான மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையிலிருந்து நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கோ அல்லது நாவலபிட்டி, கண்டி உள்ளிட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதென்றால் கூட குறித்த வீதியின் ஊடாகவே கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நோயாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர்.

குறித்த வீதி மிகவும் மோசமாக உடைந்து பாரிய குழிகள் வீதியில் காணப்படுவதனால் கர்ப்பிணி தாய்மார்கள் சிகிச்சைக்காகவும் கிளினிக் செல்லும் போதும் மிகவும் சிரமத்துடனேயே செல்கின்றனர்.

இவ்வீதி புனரமைப்பு பணிகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

வாழைப்பழத்துடன் மரண அத்தாட்சி பத்திரத்தை தூக்கிச் சென்ற குரங்கு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

மரண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை குரங்குகள் காவிச் சென்ற சம்பவம் ஒன்று அரனாயக ரஹல பிரதேசத் தில் இடம் பெற்றுள்ளது.

தனது மனைவி இறந்ததற்கான மரண அத்தாட்சிப்பத்திரத்தை நபரொருவர் அரனாயக பிரதேச பிறப்பு இறப்பு பதிவாளரிடமிருந்து பெற்றுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் வாழைப்பழச் சீப்பு ஒன்றை தொங்க விட்டிருந்த பையில் மரண அத்தாட்சி பாத்திரத்தையும் வைத்துக்கொண்டு சைக்கிளில் வீடு நோக்கி அவர் பயணித்துள்ளார்.

இடைவழியில் தனது நண்பர் வீடு ஒன்றுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதால் அவரது வீட்டின் முன்பாக சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டினுள் சென்ற அவர், திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிளிலிருந்த தனது வாழைப்பழப் பொதியைக் காணவில்லை அதிலிருந்த மரண அத்தாட்சிப் பாத்திரத்தையும்யும் காணவில்லை.

குரங்குகள் வாழைப்பழ பொதியை தூக்கிச் சென்று உண்டு ஏப்பம் விட்டு விட்டு மீண்டும் துவிச்சக்கர வண்டியை நாடி வருவதிலிருந்து வாழை பழமும் மரண அத்தாட்சி பத்திரமும் குரங்குகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதை நண்பரும் உறுதிப் படுத்தியதால் அதனைத் தேடும் பணியில் அனைவரும் விடுபட்டனர்.

எனினும் தூக்கிச் செல்லப்பட்ட வாழைப்பழங்களோ மரண அத்தாட்சி பத்திரமோ கிடைக்கவில்லை. இதனால் அவர் மீண்டும் பிறப்பு, இறப்பு பதிவாளரை சந்தித்து தனக்கு நேர்ந்த கதியை விளக்கி இன்னொரு மரண அத்தாட்சிப் பத்திரத்தை பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளார்.

சிவனொளிபாத மலையில்

ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த சந்தேகத்திற்குரிய நபர்களை சோதனை செய்யும் நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். நல்லதண்ணி பொலிஸார் மேற்கொண்ட இச் சோதனை நடவடிக்கையில் இம்புல்கொட கடவத்தை பகுதியை சேர்ந்த 32 வயதான ஒருவர் 10 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச் சாட்டின்பேரில் கைது செய்யப்பட்டார் . இவ்வாறு கைது செய்யப்பட்டவர் நேற்றுமுன்தினம் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யபட்டு எதிர்வரும் 18 ம் திகதி ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர கூறினார்.

பசறை வலயக் கல்வி பணிமனையின் கல்வி பணிப்பாளராக திருமதி ஸரீனா பேகம் நேற்று (10) கல்விப் பணிமனையின் தலைமையகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பகினிகஹவெலையைச் சேர்ந்தவர் ஆவார்.

(லுணுகல நிருபர்)

கண்டியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட நுண்கலைச் சங்கம் அதன் ஆரம்ப நிகழ்ச்சியான 'கலைச் சங்கமம்' கலை நிகழ்ச்சியை கண்டி புனித சில்வெஸ்டர் பாடசாலை மண்டபத்தில் நடாத்தியது. நிகழ்வில் இடம் பெற்ற நடன குழுவினரையும்; இதற்கான அணுசரனையாளர்களையும் முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 11 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.05
லுஹர்	12.20
அஸர்	03.41
மஃரிப்	06.11
இஷா	07.26

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் மார்கழி 27

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

க.பொ.த. பரீட்சையை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க வேண்டாம்

அரச உயரதிகாரிகளிடம் பிரதமர் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

லட்சக்கணக்கான மாணவர்கள் இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதால், பரீட்சையை குழப்புவதற்கு எவருக்கும் இடமளிக்க வேண்டாமெனப் பிரதமர் தினேஷ்குணவர்தன தெரிவித்துள்ளார்.

'புதிய பயணம் புதிய நாடு' என்ற தொனிப்பொருளில் மாவட்ட செயலாளர்களுக்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமரே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர்,

தடைப்பட்டிருந்த பொருளாதாரம் தற்போது சற்று மேம்பாடு கண்டு வருகிறது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார தொழில்முறை மற்றும் சேவை பொறிமுறைகளில் பணியாற்றும் போது, பொறுப்புக்களையும் சவால்களையும் பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளது.

10,100 பாடசாலைகள் நாட்டில் செயல்படுகின்றன. அதில் அரைவாசிக்கு மேற்பட்ட பாடசாலைகள் ஒரு ஏக்கருக்கும் அதிகமான காணிகளில் இயங்குகின்றன. மேலும் சில பாடசாலைகளில் 10 அல்லது 12 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் காணப்படுகின்றன. அவற்றை முறையாகப் பயன்படுத்தி குறுகியகால பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? இல்லையா என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ அறிக்கைகளில் எவ்வித விடயங்களும் காணப்படவில்லை.

எனினும், பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு ஒரு அங்குல காணியையும் உபயோகிக்காமல் விடக்கூடாது. இது தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல், வழிகாட்டுதல் காணப்படுகின்றன. அவற்றில் நிலவும் குறைபாடுகளை ஆராய வேண்டியது எமது பொறுப்பாகும். நாம் புள்ளிவிபரங்களுக்கு மட்டும் மட்டுப்பட்டு சேவை செய்யக் கூடாது.

சில தினங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. அனைத்து பிரதேசங்களிலும் அதனை எந்தத் தடைகளுமின்றி நடத்துவதற்கு மாவட்டச் செயலாளர்கள் அவதானமாக செயற்பட வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு மட்டுமே அந்தப் பொறுப்பு உள்ளது என தெரிவித்து பொறுப்பை தட்டிக்கழிக்கக் கூடாது.

பரீட்சை ஆணையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இணைந்து செயற்படவேண்டியது அவசியம். பரீட்சையை குழப்புவதற்கு எவருக்கும் இடமளிக்கக்கூடாது. ஆயிரக்கணக்கான ஆசிரியைகள் பரீட்சைகளில் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான எமது பிள்ளைகள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

06

தேர்தலின்போது பொதுச் சொத்துக்களை சட்டத்துக்கு முரணாக பயன்படுத்துவதை தடுப்பது அவசியம்

பெப்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம்

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக தற்போதைய உறுப்பினர்கள் பொதுச் சொத்துக்களை சட்டத்துக்கு முரணாகப் பயன்படுத்தக் கூடும். எனவே இவற்றைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென பெப்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பெப்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

தற்போது உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 21 ஆம் திகதியின் பின்னர் சகல கட்சிகளும் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும். தேர்தல் நிறைவடையும் வரை அந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

எனினும், இந்தக் காலப்பகுதியில் 340 உள்ளூராட்சி மன்றங்களும் இயங்கி வருவதால், போட்டியிடும் மேயர்கள், தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் தமது அதிகாரங்களை சட்ட விரோதமாக பயன்படுத்தக் கூடும்.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் ஏனைய வளங்கள் தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்தோடு உள்ளூராட்சி மன்றங்களினூடாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் , நலன்புரி

06

வர்த்தக கப்பல் செயலக சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

புதிய கட்டடத்துக்கு மாற்ற தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

துறைமுகம் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கீழியங்கிவந்த வர்த்தக கப்பல் செயலகம், மக்கள் சேவையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அச்செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுடன், நாளை (12) வரை வழங்கப்படும் மக்கள் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வர்த்தகக் கப்பல் செயலகத்துக்கு வர வேண்டாமென பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எனினும், செயலகத்தின் மூலம் ஒன்லைன் ஊடாக வழங்கப்படும் சேவைகள் வழமை போன்று இடம்பெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர காரணங்களுக்காக தற்போதுள்ள கட்டடத்திலிருந்து வேறு கட்டடமொன்றுக்கு செயலகத்தை மாற்றம் செய்வதற்கு தீர்மானித்துள்ளதா கவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். உலகத் தமிழர் மாநாடு

படுகொலையின் 49ஆவது நினைவேந்தல் நேற்று

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 49ஆவது நினைவேந்தல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வு, யாழ்ப்பாணம் முற்றவெளில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நான்காவது உலகத் தமிராய்ச்சி மாநாடு 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (03) முதல் (10) வரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் இறுதிநாளன்று பொலிஸாருடன் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

தம்பியின் கையடக்க தெலைபேசியில்

பப்ஜி கேம் விளையாடிய அண்ணன் தம்பியின் கத்திக்குத்துக்கு பலி

37 வயதான 02 பிள்ளைகளின் தந்தை பலி

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு 1/4 பகுதியில் நேற்று (10) தம்பியின் கத்திக்குத்துக்கு இலக்கான அண்ணன், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தம்பியின் கையடக்க தொலைபேசியை எடுத்து அதில் அண்ணன் பப்ஜி கேம் விளையாடியுள்ளார். இதன் போது தம்பி தன்னுடைய தொலைபேசியில் அண்ணன் கேம் விளையாடியதை எதிர்த்து பேசியுள்ளார். இச் சந்தர்ப்பத்தில் இரண்டு பேருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் கத்திக் குத்தில் முடிந்துள்ளது.

இறந்தவரின் தம்பி தான் வைத்திருந்த கத்தியால், அண்ணணின் நெஞ்சுப் பகுதியில் குத்தியுள்ளார்.

இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 37 வயதுடைய 03 பிள்ளைகளின் தந்தையான தருமராசா தவசீலன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மேலதிக பாரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் தருமபுரம் பொலிஸாரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனியவள மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் நஸீர் சவூதி பயணம்

கனிய வள மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நேற்று (09) சவூதிஅரேபியா சென்றுள்ளார். இம்மாநாடு இன்று (10) முதல் (12) வரை ரியாதில் நடைபெறுகிறது. மன்னர் அப்துல்அஸீஸ் நிலையத்தில் நடைபெறும் இம்மாநாட்டில் பங்கேற்கச் சென்ற அமைச்சரை, சவூதி அரேபியாவின் கனிய வள அமைச்சர் சாலி அப்துல்லா அலாகில் ரியாதிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். இம்மாநாட்டில் பங்கேற்கும் அமைச்சர் இலங்கையில், கனியவள அபிவிருத்தியை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தும் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

அரச ஊழியர் சம்பளம், கொடுப்பனவு;

வீண் அச்சம் கொள்ள தேவையில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அல்லது சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பில் எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவுகள் முகாமைத்துவம் செய்வதில்

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	243.91	255.11
கனடியன் டொலர்	263.86	275.73
யூரோ	382.82	398.41
ஜப்பான் யென்	2.7603	2.8723
சிங்கப்பூர் டொலர்	267.84	279.09
ஸ்டேலிங் பவுன்ஸ்	433.54	450.25
சுவிஸ் பிராங்க்	387.22	405.66
அமெரிக்க டொலர்	360.22	371.59

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	963.09	கட்டார் ரியால்	99.37
குவைத் டினார்	1,186.90	சவூதி ரியால்	96.59
ஓமான் ரியால்	943.09	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	98.86

தினகரன்
THINAKARAN
கிழக்கின்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 27ஆம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 17

குறள் தரும் சிந்தனை

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

சொல்லுக்கும் செயலுக்கும்
தொடர்பில்லாதவரின் நட்பு கனவிலேகூடத்
துன்பத்தைத்தான் கொடுக்கும்.

மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வேலைநிறுத்தங்கள்!

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் கனிஷ்டதர ஊழியர்கள் நேற்றுமுன்தினம் முதல் 24 மணி நேர வேலைநிறுத்தம் ஒன்றை முன்னெடுத்தனர். மூன்று கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைநிறுத்தம் நேற்றுக் காலையுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

'தற்போதைய பொருளாதார சிரமங்களுக்கு நிவாரணமாக சுகாதார ஊழியர்களுக்கு நிவாரணமாகக் கொடுப்பனவு வழங்குதல், வங்கிகள் அதிகரித்துள்ள வட்டிவீதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல், பல்துறை ஊழியர்களை சுகாதார சேவைக்கு சேர்த்துக் கொள்வதை நிறுத்தியுள்ளமையை மீள்பரிசீலனை செய்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் இத்தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நாடெங்கிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் கனிஷ்டதர ஊழியர்கள் இவ்வேலைநிறுத்தத்தில் இணைந்து கொண்டனர். குறிப்பாக அரசாங்க சுகாதார சேவையில் கடமையாற்றும் அம்புலன்ஸ் வண்டிகளின் சாரதிகள், சுகாதார ஊழியர்கள், சமையற்காரர்கள், மின்னுயர்த்தி இயக்குபவர்கள் உள்ளிட்ட கனிஷ்டதர ஊழியர்கள் இவ்வேலைநிறுத்தத்துக்கு பங்களிப்பு செய்தனர்.

இதன் விளைவாக கனிஷ்ட ஊழியர்கள் கடமையாற்றும் பிரிவுகளில் வைத்தியசாலைகளின் வழமையான சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைகள் பெறும் நோயாளர்களும் சிகிச்சை பெற வந்த நோயாளர்களும் பலவிதமான அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

சுகாதார சேவையின் கனிஷ்டதர ஊழியர்கள் இந்த வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து நோயாளர்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்க முன்னர் அவர்களது கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து இருக்க வேண்டும். அதன் ஊடாக இக்கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்திருக்க வேண்டும். இக்கோரிக்கைகள் அனைத்துமே பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவையாகும்.

அதேநேரம் எந்தவொரு கோரிக்கையானாலும் பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் தான் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அந்த வழிமுறைகளைப் பயன்படுத்தி தீர்வு காண முடியாத கோரிக்கை எதுவும் இருக்க முடியாது. அதுவே சமூக ஆர்வலர்களின் அபிப்பிராயமும் ஆகும்.

இத்தொழிற்சங்க நடவடிக்கைக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றாக, சுகாதார ஊழியர்களின் பொருளாதார அசௌகரியங்களுக்கு கொடுப்பனவு ஒன்றை வழங்க வேண்டும் என்பது உள்ளது.

தற்போதைய சூழலில் முழு நாடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அதன் தாக்கங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் நாட்டில் எல்லா மட்டத்தினருமே முகம் கொடுத்துள்ளனர். அதனால் இப்பொருளாதார நெருக்கடியின் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ள சில தரப்பினரின் நலன்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு விஷேட கொடுப்பனவுகளை வழங்கவும், இன்னும் சில தரப்பினருக்கு சலுகைகளையும் நிவாரணங்களையும் வழங்கவும் அரசாங்கம் நடவடக்கைகளை முன்னெடுத்து இருக்கிறது.

அதனால் சுகாதாரத்துறையின் கனிஷ்டதர ஊழியர்களும் தம் கோரிக்கையை உரிய முறைப்படி முன்வைத்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் போது அக்கோரிக்கைகளுக்கு சாதகமான பிரதிபலிப்புகள் நிச்சயம் கிடைக்கப் பெறவே செய்யும்.

அதேபோன்று அடுத்த கோரிக்கையாக, அதிகரிக்கப்பட்டுள்ள வங்கிக் கடன்களுக்கான வட்டி வீதத்தை குறைத்தல் காணப்படுகிறது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உரிய ஒழுங்கில் கலந்துரையாடலை மேற்கொள்ளும் போது அதற்கும் சாதகமான பதில்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மூன்றாவது கோரிக்கை குறித்தும் சரியான அணுகுமுறையைக் கையாளும் போது அதற்கும் திருப்திகரமான பதில்களை பெற்றுக் கொள்ள முடியும்.

நிலைமை இவ்வாறு இருக்கையில், இப்படியான அணுகுமுறைகளைக் கையாளாமல் எடுத்த எடுப்பில் வேலைநிறுத்தத்தை முன்னெடுத்ததன் ஊடாக மக்கள் தான் அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகினர்.

இவ்வாறான வேலைநிறுத்தங்கள் மூலம் மக்களை அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்குவதால் கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கப் பெறாது. இதனை சுகாதாரத்துறை கனிஷ்டதர ஊழியர்கள் உள்ளிட்ட எல்லா தொழிற்சங்கங்களும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் அசௌகரியங்களில் இருந்து நாட்டையும் அனைத்து மக்களையும் மீட்டெடுக்கவே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் இரு கருத்துக்கு இடமி`ல்லை. இந்நடவடிக்கைகளுக்கு ஆதவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே இப்போதைய தேவையாகும். நாட்டையும் மக்களையும் உண்மையாக நேசிக்கும் அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பு அவ்வாறே இருக்கும். அதைவிடுத்து யாதுமறியா அப்பாவி மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வேலைநிறுத்தங்கள் உகந்தவையல்ல.

editor.tkn@lakehouse.lk

மாணவரின் ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் போதிய கவனம் செலுத்தப்படுவது அவசியம்

சமூகத்தில் இன்றைய காலகட்டத்தில் குடும்ப உறவுகள் சிதைவடைந்து உறவுகளில் விரிசல்கள் ஏற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. கணவன்_ மனைவி பிரிந்து வாழ்தல், விவாகரத்துப் பெறுதல், பிள்ளைகள் அநாதரவாக கைவிடப்படல் போன்ற காரணங்களிளால் பிள்ளைகள் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் துன்புறுத்தப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது.

பிள்ளைகள் சிறந்த முறையில் சமூகமயப்படுத்தப்படாமல் இருப்பதால்அவர்கள் ஆளுமையற்றவர்களாக இருக்கின்றார்கள். வளர்ந்த பிள்ளைகள் சிலர் சபையில், கூட்டத்தில் பேசுவதற்கும் தலைமை தாங்குவதற்கும் குடும்பப் பொறுப்புகளை ஏற்பதற்கும் வெட்கப்பட்டு பின்வாங்கி ஒதுங்கி இருக்கின்றார்கள். இது பிள்ளையின் ஆளுமையற்ற தன்மையைக் காட்டுகின்றது.

இதனால் பாடசாலையிலும் குடும்பத்திலும் சமூகத்திலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன .

சிறந்த பரீட்சைப் பெறுபேறு மட்டும் இருந்தால் போதாது, ஆளுமைப் பண்புகளும் நிறைந்திருக்க வேண்டும். ஆளுமையுள்ள பிள்ளைகளை உருவாக்குவது பாடசாலை மற்றும் குடும்பத்தின் கடமையாகும்.

பிள்ளைகளின் உடல் வளர்ச்சியோடு அவர்களின் ஆளுமைப் பண்புகளும் சிறுவயதிலிருந்து கட்டியெழுப்பப்படல் வேண்டும். இன்றைய காலகட்டத்தில் சமூகத்திலும் வேலைத்தலத்திலும் அறிவால் மாத்திரம் நிலைத்திருப்பதை விட, ஆளுமைப் பண்புகளால் நிறைந்தவர்களை சமூகம் வரவேற்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வேலைவாய்ப்புகளுக்கு ஆட்களை சேர்க்கும் போது கல்விச்சான்றிதழுடன் சிறந்த ஆளுமைப்பண்புகள் நிறைந்தவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படுகிறது. எனவே பாடசாலையில் மாணவர்களை பரீட்சைக்கு மாத்திரம் தயார்படுத்தாமல் ஆளுமைப்பண்புள்ள பிள்ளைகளை உருவாக்குவதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்காக பாடசாலைக் கலைத்திட்டத்தில் இனைப்பாடவிதானச் செயற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே இந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மாணவர் ஆளுமைப்பண்புகள் நிறைந்தவர்களாக வருவதற்கு வாய்ப்புள்ளது.

ஒருவரின் தோற்றம், உருவம்,பேச்சு, நடைஉடை பாவனை, இயல்புகள், பிரயாணமுறை போன்ற வெளிப்புற இலட்சணங்களே சாதரண வாழ்க்கையில் ஆளுமை எனக் கருதப்படுகின்றன. அதாவது ஒருவர் சமூகத்தில் தன்னை எவ்வாறு வெளிக்காட்டுகின்றாறோ அதுவே அவருடைய ஆளுமையாக சாதாரண மக்களால் கணிக்கப்படுகிறது. மற்றையவர்களிலும் பார்க்க ஒரு தெளிவான தோற்றம் ஒருவரிடம் காணப்படும் போதே இவரிடம் ஆளுமை காணப்படுகிறது என்று பலர் கூறுகின்றனர்.

ஒவ்வொரு மனிதரும் (பிள்ளை) மற்றவர்களிலும் பார்க்க வேறுபட்டுக் காணப்படுவர். இது ஆளுமையின் விசேட தன்மையாகும். ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் அவர் செயற்படும் விதத்தை அறிந்து கொள்ளல் வேண்டும். அப்போதுதான் அந்தப் பிள்ளை ஆளுமையுள்ள பிள்ளையா இல்லையா என்பதைக் கணிக்கக் கூடியதாகவிருக்கும்.

ஒல்பேட் (Allport) என்ற உளவியலாளர் ஆளுமை என்றால் என்ன என்பதற்கு இவ்வாறு விளக்கம் தருகிறார்.

சூழல் இடைத்தாக்கங்களுடன் செயற்படும் போது விசேட நடத்தையைத் தீர்மானிக்கும் ஒருவரிடம் உள்ளார்ந்த நிலையில் காணப்படும் உளவியல் அமைப்பின் உருவாக்கம் ஆளுமையாகும். அதாவது ஒருவன் தனக்கே உரித்தான ஒரு முறையில் சூழலுக்கேற்றவாறு பொருத்தப்பாடடைகிறான். என்பதனை அவனது உள, பௌதீக அமைப்பின் அப்போதைய ஒழுங்கமைப்பு ஆளுமையாகும்.

அதாவது ஒருவனது உடல் பண்புகள் உளப்பண்புகள் மனப்போக்குகள் சமூக அறநெறிப்பண்புகள் ஆகிய சகலபண்புக்கூறுகளையும் குறிப்பது ஆளுமையாகும் என்று கூறுகிறார்.

பிறருடன் சுமுகமான தொடர்புகளைக் கொண்ட பிள்ளைகள் நேர்மை, இரக்கம், முகமலர்ச்சி, தாராள மனப்பான்மை, அடக்கம், கீழ்ப்படிவு, நம்பிக்கை, கவர்ச்சி மற்றும் சிறந்த தொடர்பாடல் கொண்டவர்களாக காணப்படுவர். மேலும் சமூகச் சூழல் காரணிகள் பிள்ளையின் ஆளுமை உருவாக்கத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன. சூழலுடன் நிகழும் இடைவினை தாக்க செயல்களினால் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் ஆளுக்காள் வேறுபடுகின்றன.

பிள்ளை வளரும் குடும்பத்தின் உட் சூழல் பல காரணங்களால் வேறுபட்டுக் காணப்படுகிறது. சமூகத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுநிலைமை, சமுதாய வகுப்பு, பிள்ளை வளர்ப்பு முறைகள், வழிபாடுகள் ஒழுங்குகள், தண்டனைகள், பெற்றோரின் கல்வி போன்ற காரணிகள் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் தாக்கம் செலுத்துகின்றன .

சிறுவயதிலிருந்து சமய விழுமியப் பண்புகளை பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும் மனித சமூகத்தில் பொதுவாகக் காணப்படும் விழுமியங்களான அன்பு, சாந்தம், நேர்மை அறிவு , பிறருக்கு உதவி செய்தல் அகிம்சை, காரூண்யம் நல்லொழுக்கப் பண்புகள் சிறுவயதிலிருந்து கட்.டியெழுப்பப்பட வேண்டும்.

பாடல், இசை, பேச்சு, சித்திரம், விளையாட்டு, புத்தாக்கச் செயற்பாடுகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், தலைமை தாங்குதல் போன்றன பிள்ளைகள் ஆளுமையை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களாகும். எனவே விழாக்களிலும் கூட்டங்களிலும் சமய நிகழ்வுகளிலும் பிள்ளைகள் பங்குபற்றும் போது ஆளுமையை வெளிக்கொணரக் கூடியதாகவிருக்கும் ஆளுமையை வளர்ப்பதற்கு எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும்.

பிள்ளைகளை எல்லா செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு சுதந்திரமாக இடமளித்தல் வேண்டும். மாணவர்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமளித்தல் வேண்டும். மாணவருக்கு கணிப்பை வழங்கக் கூடியவாறு வகுப்பறைச் சூழல் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மாணவர்கள் வெற்றிபெறக் கூடியவாறு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

தோல்வி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதிக மனமுறிவின்றி ஏற்றுக் கொள்ள பழக்குதல் வேண்டும். எனவே இவ்வாறான விடயங்கள் மூலம் மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அதிபர் ஆசிரியர் பாடசாலை என்பவை பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இஸ்மாயில் ஹுஸைன்தீன்...✍
(B.Ed) (அம்பாறை விசேட நிருபர்)

'இலக்கிய வித்தகர்' விருது பெற்றார் சம்மாந்துறை மஷூறா சுஹூறுதீன்

கிழக்கு மாகாண 'இலக்கிய வித்தகர் விருது' பெற்றார் இலக்கிய ஆளுமை சம்மாந்துறை மஷூறா சுஹூறுதீன். ழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய 2021ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழா அண்மையில் திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.சரண்யாவின் நெறிப்படுத்தலில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் இவருக்கான விருதை வழங்கி கௌரவித்தார்.

மஷூறா சுஹூறுதீன் சம்மாந்துறையைச் சேர்ந்த அப்துல் மஜீத்_சுபைதா தம்பதியின் புதல்வியாவார். அவர் சம்மாந்தறை முஸ்லிம் மத்திய கல்லுரியில் கற்றுள்ளார். சமாதான நீதவானாகிய

இவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகின்றார். சிறுவயதிலேயே கலை, இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராவார்.

1979ஆம் ஆண்டு பாடசாலைக் காலத்திலேயே கலை, இலக்கியப் பணியை ஆரம்பித்தவர்.இன்றும் கலை.இலக்கியப் பணியைத் தொடர்கின்றார். கவிதை,கதை, கட்டுரை,நாடகம், வில்லுப்பாட்டு, சித்திரம், கைப்பணி என்பவற்றை படைப்பதில் மிகவும் ஆர்வமாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவரது படைப்புக்கள் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதுடன் மின் இதழ் சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

இலக்கியத்திற்காக இவர் பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார். சாரணியம், சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் முதலுதவிப் பிரிவிலும் பணியாற்றி வருகின்றார்.

பி.எம்.எம்.ஏ.காதர்...✍
(மருதமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் மூவருக்கு சேவைநலன் பாராட்டு விழா

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் நீண்டகாலம் கல்விப் பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற கல்வியாளர்கள் மூவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இவ்விழா சமீபத்தில் விமரிசையாக நடைபெற்றது.

வலயக் கல்வி அலுவலக கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், நலன்புரிச் சங்கங்கள் இணைந்து நடத்திய இவ்விழா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மிலின் நெறிப்படுத்தலில் வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் ஓய்வுபெற்ற அட்டாளைச்சேனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சி.கஸ்ஸாலி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (ஆங்கிலம்) பீ.எம்.அபுல்ஹஸன், (கணிதம்) ஏ.எல்.ஏ.எம்.யூசுப் ஆகியோரின் பணிகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப் பா, நினைவுப் பரிசு, பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் , "கிழக்கு

மாகாணத்தில் அக்கரைப்பற்று கல்வி வலயம் முன்னணி வலயமாக மிளிர்வதற்கு இவ்வலுவலகத்தில் பணியாற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் மகத்தான பணியும், அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்தான் காரணம் என்றால் அது மிகையல்ல.

தேசிய ரீதியிலும், மாகாண மட்டத்திலும் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பெயரை உயர்த்தியவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லுவது மனதுக்கு கவலையளிப்பதுடன், மாணவர்களுக்கு பேரிழப்புமாகும். ஆவர்கள் தொடர்ந்து கல்விக்கும், தங்களது பிரதேசத்திற்கும் உதவ வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், ஓய்வுநிலை உத்தியோகத்தர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முகம்மட் றிஸான்...✍
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக காங்கேசன்துறை-தமிழ்நாடு சரக்குக் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள பாண்டிச்சேரி உள்ளிட்ட துறைமுகங்களுக்கும் இடையில் சரக்குக் கப்பல் சேவையை இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் முதன்முறையாக ஆரம்பிப்பதற்கு கொழும்பிலுள்ள தனியார் கப்பல் நிறுவனமொன்று உத்தேசித்துள்ளது. இதற்கு யாழ். வணிகர் கழகம் மிகுந்த வரவேற்புத் தெரிவித்துள்ளது.

யாழ். வணிகர் கழகம் பெரிதும் வரவேற்பு

முன்னைய காலத்தில் காங்கேசன் துறை துறைமுகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் கப்பல் சேவை நடத்தப்பட்ட போதிலும், அப்போது இந்தியாவிலிருந்து சீமெந்து மாத்திரமே காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

இந்நிலையில், தற்போது காங்கேசன்துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் இச்சரக்குக் கப்பல் சேவையை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்திலிருந்து ஆரம்பிப்பதற்கான சாத்தியம் இருப்பதாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் இரத்தினலிங்கம் ஜெயசேகரன் தெரிவித்தார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கை

இரு நாடுகளின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அரிய வாய்ப்பு

யாக வாரத்தில் ஒருநாள் சரக்குக் கப்பல் சேவையை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், 300 மெற்றிக் தொன்பொருட்களைஉள்ளடக்கக்கூடிய சிறியதொரு கப்பலே சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இரத்தினலிங்கம் ஜெயசேகரன் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தியாவிலிருந்தே முதலாவது கப்பல் அங்குள்ள பொருட்களை ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வரவுள்ளது. அத்துடன், இலங்கை அரசாங்கம் அனுமதிக்கும் பொருட்களையே ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் சேவைக்கான போக்குவரத்து நேரத்தை அவதானிக்குமிடத்து காங்கேசன்துறைக்கும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்கும் இடையில் 4 மணி நேரம் முதல் 6 மணி நேரம் வரையே செல்லுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வரும் கொழும்பிலுள்ள தனியார் கப்பல் நிறுவனமானது, இது தொடர்பான பல கலந்துரையாடல்களை யாழ். வணிகர் கழகத்துடன் நடத்தியுள்ளது. இதன் போது, சரக்குக்கப்பல்சேவையைஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டிருந்தது. இது தொடர்பாக கடைசியாக கடந்த 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர்.

இவ்வாறு ஒரு சரக்குக் கப்பல் சேவையை ஆரம்பித்து, கேள்விகள் அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் பல சரக்குக் கப்பல்களை சேவையில் ஈடுபடுத்த முடியும் எனவும் இரத்தினலிங்கம் ஜெயசேகரன் தெரிவித்தார்.

எமது நாட்டில் சுமார் 30 வருட காலமாக நிலவிய யுத்தசூழ்நிலை முடிவுக்கு வந்து, அதிலிருந்து நாடு மீண்டெழுந்து வருகையில் கொரோனா தாக்கம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, பல்வேறு காரணிகளினால் தற்போது எமது நாடு பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

தற்போது எமது நாட்டில் நிலவும் பொருளாதாரப் பின்னடைவு மிக்கதொரு இக்காலகட்டத்தில் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் இடையில் சரக்குக் கப்பல் சேவை நடைபெற்று வந்தாலும் கூட, அதில் பொருளாதார ரீதியாக சிறந்த முன்னேற்றத்தைக் காண முடியாது என்பது அனைவரும் அறிந்ததே.

ஆகையால், காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் தமிழ்நாட்டுக்கும் இடையில் மற்றுமொரு சரக்குக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பக்கபலமாக அமையும். அத்துடன், இச்சரக்குக் கப்பல் சேவையானது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமையக் கூடும்.

ஏனெனில், மேற்படி இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்பாடல் மேலும் விரிவடைந்து நல்லுறவு வலுவடைவதுடன் மாத்திரமன்றி, இரு நாடுகளினதும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு கேள்வி அதிகரிக்கும். இவ்வாறான சூழ்நிலையில், இரு நாடுகளும் பொருளாதார வளர்ச்சியில் தன்னிறைவு அடைவதற்கு பாரிய உந்துசக்தியாக அமையும் சாத்தியம் இக்கப்பல் சேவையினால் காணப்படுகின்றது.

இச்சரக்குக் கப்பல் சேவையின் மூலம் இரு நாட்டு வர்த்தகர்களும் நன்மை அடைய முடியும் என்பதுடன், இலங்கையின் தற்போதைய இக்கட்டான பொருளாதார நெருக்கடி மிக்க சூழ்நிலைக்கு மத்தியில் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எமது நாட்டு வர்த்தகர்கள் தாமாக முன்வந்து பங்களிப்புச் செய்வதற்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும் நிலைமையும் உண்டு.



யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் இரத்தினலிங்கம் ஜெயசேகரன்

இதுஇவ்விதமிருக்க, காங்கேசன் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவையின் மூலம் இலங்கையினதும் இந்தியாவினதும் இயற்கை வளம் சார்ந்த உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு கேள்விகள் மென்மேலும் அதிகரிக்கும் என்பதுடன், புதிய புதிய முறையிலான உற்பத்திப் பொருட்கள் உருவாக்கப்படும் சாத்தியமும் காணப்படுகின்றது. அத்துடன், மக்களும் இயற்கையுடன் ஒன்றித்து வாழும் ஆரோக்கியமான சூழ்நிலை மீண்டும் உருவாகலாம்.

உணவு உட்பட பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்து வரும் இந்தியாவுடன் வர்த்தக உறவை எமது நாடு மேலும் பேணும் பட்சத்தில், தற்போது எமது நாட்டில் காணப்படும் உணவு உள்ளிட்ட

பொருட்களின் விலையேற்றம் ஓரளவிலேனும் குறைவதற்கு வாய்ப்புக் காணப்படுவதுடன், பொருட்களின் புழக்கமும் அதிகரித்துக் காணப்படும். உணவுக்காக அல்லல்படும் சாதாரண மக்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும். குறைந்த செலவில் நிறைவான வாழ்க்கையை வாழும் நிலைமை மக்களுக்கு ஏற்படும்.

எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தென்னை, பனை சார்ந்த உள்ளூர் உற்பத்திப் பொருட்களை, ஆடை உற்பத்திகளை, பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், கோப்பி, வாசனைத் திரவியங்களை இச்சரக்குக் கப்பல் சேவையின் உதவியுடன் ஏற்றுமதி செய்வதனால், எமது நாட்டு உற்பத்திகளுக்கு கேள்விகள் அதிகரிக்கும் என்பதுடன், நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள வர்க்கத்தைச் சேர்ந்த பெருமளவானோர் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் நிலைமையும் ஏற்படும். அத்துடன், புதிய தொழிற்சாலைகள் உருவாகுவதற்கான வாய்ப்பும் உண்டு. இவற்றின் மூலம் எமது நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஓரளவிலேனும் ஈட்ட முடியும் என்பதுடன், பின்தங்கியுள்ள எமது நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு சாதகமான வழி அமையலாம்.

ஆகவே, காங்கேசன்துறைக்கும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்கும் இடையில் ஆரம்பிக்கப்படவுள்ள இச்சரக்குக் கப்பல் சேவையை வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் உட்பட அனைவரும் சிறந்த முறையில் பயன்படுத்தி நன்மையடைய வேண்டும் என்று வர்த்தகர்களுக்கு யாழ். வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

ஆர்.சுகந்தினி...✍

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வருகை தந்து 125 ஆண்டுகள் நிறைவு

“நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோமோ அப்படி நம்மை அமைத்துக் கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது” என்றார் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்து 125 ஆவது ஆண்டு நிறைவு பெறுவதையொட்டிய தொடர்விழாவும் புத்தகக் கண்காட்சியும், மட்டக்களப்பு களுதாவளையில் அண்மையில் களுதாவளை கலாசார மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் மாணவர்களின் கலை ஆற்றுகைகளுடன் நடைபெற்றன.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் ஏற்பாட்டில், அவ்வாலய பரிபாலன சபைத் தலைவர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ், களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையின் அதிபர் கே.சத்தியமோகன், களுதாவளை இந்து மாமன்றத்தின் தலைவர் ப.குணசேகரன் மற்றும் களுதாவளையில் அமைந்துள்ள ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ், முதலில் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்துக்கு தரிசனம் செய்தார். அதன் பின்னர் பிரதான வீதியில் அமைந்துள்ள ஆலய வாயிற்கோபுரத்தில் வைத்து சுவாமிகள் உள்ளிட்ட அதிதிகள் மலர்மாலை அணிவித்து மேளதாள வாத்தியங்கள் முழங்க கலாசார மண்டபத்தினுள் வரவேற்று அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் தேவார இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வரவேற்பு நடனம், சுவாமி விவேகானந்தரைப் பற்றிய உரைகள், வில்லுப்பாட்டு மற்றும், சிக்காகோ போருரையின் காணொளிக் காட்சிகள் என்பன அரங்கேற்றப்பட்டன.

களுதாவளையில் விழா, புத்தகக் கண்காட்சி

சுவாமி விவேகானந்தரின் இலங்கைக்கு விஜயம் செய்து 125 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு களுதாவனை இந்து மாமன்றத்தினால் ஏற்கனவே நடத்தப்பட்ட போட்டிகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு இதன் போது பரிசில்களும் வழங்கப்பட்டன.

சுவாமி விவேகானந்தரின் சிறப்புக்கள் தொடர்பில் இதன்போது இராமகிருஷ்ண மிஷன் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் உரை நிகழ்த்தினார். இதன்போது அவர் தெரிவிக்கையில், ஆலயங்களிலே பிள்ளைகளுக்கு பேசுவதற்கும், பேச்சுக்களைக் கேட்பதற்கும் கற்றுக் கொடுப்பதில்லை. மனிதர்களுடைய திறமைகளை அடையாளப்படுத்தி அதனை வெளியிட வேண்டும். மனிதர்களிடையே புதைந்திருக்கின்ற திறமைகளை வெளியிட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.பாஸ்கரன் உரையாற்றுகையில், களுதாவளைக் கிராமத்தோடு இராமகிருஷிண மிஷன் தொடர்பாயிருப்பதென்பது மீக நீண்ட வரலாறாகும். அது இற்றைவரையில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் இக்கிராமத்திலிருந்து இயங்குகின்ற இந்து மாமன்றம் எட்டு அறநெறிப்பாடசாலைகளை நடத்தி வருகின்றது என்றார்.

இந்நிலையில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் நிருவாகத்தினரால் புத்தகக் கண்காட்சி ஒன்றும் இதன்போது நடத்தப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் 15 வீத விலைக்கழிவில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான மகான்களின் பொருமைகள் தொடர்பில் மக்களிடையே அவ்வப்போது விழாக்கள் மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் எடுத்தியம்பி வருவது பாடசாலை மாணவர்களுக்கும், ஏனையேருக்கும் பெரும் வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வ.சக்திவேல்...✍
(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

கல்விச் சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் செல்லத்துரை தர்மரட்ணம்

செல்லத்துரை தர்மரட்ணம் 32 வருட ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார். இவர் 13 வருடங்கள் ஆசிரியராகவும் 19 வருடங்கள் பாடசாலை அதிபராகவும் பணியாற்றியவர்.

வவுனியா மாவட்டம் மாதர் பணிக்கர் மகிழங்குளம் பாடசாலையில் ஆசிரிய சேவையில் 1990 ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்த தர்மரட்ணம், ஒரு வருடத்தின் பின்னர் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் இணைந்து 12 வருடங்கள் பணியாற்றினார். பின்னர் 2003 ஆம் ஆண்டு வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த பறையனாலங்குளம் பாடாசலையின் அதிபராகப் பொறுப்பேற்றார்.

அக்காலத்தில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக அந்தப் பாடசாலை பூவரசங்குளம் குருக்கள் புதுக்குளம் பாடசாலையுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஒரு வருடம் கடந்த நிலையில் அவர் தாலிக்குளம் பாடசாலையின் அதிபராக இடமாற்றம் பெற்றார்.

தாலிக்குளம் பாடசாலையே தர்மரட்ணம் என்ற ஆசிரியரின் அதிபர் வாண்மை வல்லமையை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்கு வழிகோலியிருந்தது. தாலிக்குளம் மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை. போர்ச்சூழலில் பாதுகாப்புக் காகத் தமது கிராமங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்த மக்கள், குடிசைகள் அமைக்கப்பட்டு அங்கு தஞ்மளிக்கப்பட்டிருந்தனர்.

மீள்குடியேற்ற நடவடிக்கையைத் தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அப்பாடசாலையின் பௌதிக நிலைமைகளில் அவர் பல மாற்றங்களைச் செய்தார்.

வெற்று நிலத்தில் கொட்டில் பாடசாலையாகத் திகழ்ந்த தாலிக்குளம் பாடசாலைக்கான காணியை)சுற்றுமதில் அமைத்து, பௌதிக ரீதியாகக் கட்டமைத்து, கட்டட வசதிகளையும் ஏற்படுத்தினார். அவர் இப்பாடசாலையைப் பொறுப்பேற்றபோது அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் அதனைச் செயற்படுத்துவது அவசியம் தானா என்று அதிகாரிகள் கேள்வி எழுப்பிய நிலையில் மிக மோசமாகப் பின்தங்கியிருந்தது. அந்தப் பாடசாலையைச் சீரமைத்து, பயன்தரு மரங்கள் பூக்கன்றுகள் முதலியவற்றைக் கொண்ட ஒரு சோலையாக்கி சீரமைத்து அதனை அப்பிரதேசத்தின் முக்கிய கல்வி நிலையமாக உருவாக்கினார்.

32 வருட அரசசேவையிலிருந்து ஓய்வு

அந்தப் பாடசாலை தரம்_ 11 வரையிலான வகுப்புக்களைக் கொண்டதாக வளர்ச்சி அடைவதற்கான அடித்தளமாக அவரது செயற்பாடுகள் அமைந்தன. பௌதிக வளத்தை மேம்படுத்திய அதேவேளை, அங்கு நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மாலை நேர வகுப்புக்கள், விடுமுறைக்கால வகுப்புக்கள் என்பவற்றைத் தொடர்ச்சியாக நடத்தி, கல்வித்தரத்தையும் மேம்படுத்தினார்.

தாலிக்குளத்தில் இருந்து 2012 ஆம் ஆண்டு இடம் மாற்றம் பெற்று செட்டிகுளம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்றவுடன் அங்கேயும் தனது விவசாயப் பண்பியலை வெளிப்படுத்தும் வகையில் அந்தப் பாடசாலையின் வளவினை தென்னை உள்ளிட்ட பல்வேறு பயன்தரு வான்பயிர்களைப் பயிரிட்டு பாடசாலையின் சூழலை வளப்படுத்தினார். அப்பாடசாலையின் கட்டிட வசதிகளை மட்டுமல்லாமல் முகப்புக்கட்டடத்தையும் நிர்மாணித்து அதனைச் சிறப்புறச் செய்தார்.

பின்னர் வவுனியா இலங்கைத் திருச்சபைக் கலவன் மகாவித்தியலாய அதிபராகப் பொறுப்பேற்றுச் செயற்பட்டார். தனது அதிபர் பதவிக்காலத்தில் தாலிக்குளம், செட்டிகுளம் மகாவித்தியாலயம், இலங்கைத் திருச்சபைக் கலவன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் செயற்பாடுகளைத் திறம்பட நிர்வகித்துள்ளார். இப் பாடசாலைகளில இவரது காலத்தில் மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைகளுக்கும் அவை சார்ந்த சமூகத்திற்கும் பெருமை சேர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வித்துறைப் பணி மட்டுமல்லாமல் ஓமந்தை அரசர்பதி கண்ணகை அம்மன் (பொற்கோவில்) ஆலய அறங்காவலர் சபையின் உபதலைவராக ஆன்மீகப் பணிகள் மற்றும், ஆலயத்தின் சமூகம்சார் பொதுச் சேவைகளிலும் அவர் ஈடுபாடு கொண்டு செயலாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பி.மாணிக்கவாசகம்...✍

செனகல், காப்ரீன் பகுதியில் 02 பஸ்கள் கோர விபத்து; 40 பேர் பலி, 20 பேர் படுகாயம்

கிழக்கு ஆபிரிக்காவின் செனகல் நாட்டின் காப்ரீன் பகுதியில்,இரண்டு பஸ்கள் மோதியதில்,நாற்பது பேர் உயிரிழந்தனர்.அந்நாட்டின், தேசிய நெடுஞ்சாலையில் இவ்விபத்து நிகழ்ந்தது. அதிவேகமாகச் சென்ற இந்த பஸ்வண்டிகளின் சாரதிகள் கவனயீனமாக பஸ்களை ஓட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பஸ்சின் டயர் பஞ்சரானதும், எதிரோ மிக வேகமாக வந்த பஸ் மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 02 பஸ்களும் பலத்த சேதமடைந்தன. இதில் 40 பயணிகள் பலியானதுடன் 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். மீட்புப் படையினர் விரைந்து சென்று பணியில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துக்கு செனகல் நாட்டு அதிபர் மேக்கிசால் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். விபத்தில் 40 பேர் இறந்தது வருத்தம் அளிக்கிறது. காயம் அடைந்தவர்கள் விரைவாக குணம் அடைய வேண்டுகிறேன். நேற்று முதல் 03 நாட்கள் நாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தலில் மணிவண்ணன் அணியுடன் விக்னேஸ்வரன் இணைவு

உள்ளூராட்சித் தேர்தலில் மணிவண்ணன் அணியுடன் இணைந்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் விக்னேஸ்வரன் சந்திப்புக்கு பின்னர் கூட்டணி தொடர்பான அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. அதனையடுத்து நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் யாழ். மாநகர முன்னாள் முதல்வர் மணிவண்ணன் மற்றும் விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதன்போதே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

க.பொ.த. பரீட்சையை... (03ஆம் பக்கத் தொடர்)

இந்த செயற்பாடுகளை சீர்குலைத்தால் புதிய வருடத்தில் எமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் போகும். அத்தகைய குற்றத்திற்கு ஆளாகவேண்டாம். பிரச்சினைகள் இருக்குமானால் எமக்கு அறிக்கையிடுங்கள். இப்போதும் காலம் தாழ்த்தப்பட்டே இப்பரீட்சை நடத்தப்படுகிறது. மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே பரீட்சை ஒத்திப்போடப்பட்டது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளனர்.

தேர்தலின்போது... (03ஆம் பக்கத் தொடர்)

திட்டங்கள் , வீதி அபிவிருத்திகள் போன்றவற்றுக்கு அரச வளங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் தேர்தலில் கூடுதல் அனுகூலத்தைப் பெற முடியும். இதுவும் பொதுச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவதேயாகும். எனவே, வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் என்பன உள்ளூராட்சி மன்றங்களின் வளங்கள் மற்றும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கு சிறந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீண் அச்சம் கொள்ள ... (03ஆம் பக்கத் தொடர்)

அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் நலன்புரி கொடுப்பனவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சின் சார்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிலவும் பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்போது நாட்டின் பொருளாதாரம் ஓரளவுக்கு ஸ்திர நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் அந்த நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு இன்னும் முடியவில்லை என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு தேவையான முழுமையான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவை முகாமைத்துவம் செய்யும்போது அத்தியாவசியமான முக்கியத்துவங்களுக்கு திறைசேரி நிதியை ஒதுக்குகின்றது. அதுதொடர்பில் வீண் அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் அந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

கனேடிய பிரஜையொருவர்...

பயணியே இவர் உயிரிழந்துள்ளார்.இவர் பெத்தேகன பிரதேசத்தில் வசித்து வந்தவரென தெரியவந்துள்ளது.

அவரும் அவரது தாயாரும் நேற்று அதிகாலை 02.18 மணியளவில் கட்டாரின் தோஹாவிலிருந்து கத்தார் எயார்வேஸ் விமானமான QRR662 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

கனடாவிலிருந்து இலங்கைக்கு தனது தாயாரை அழைத்து வரும் போது, அதிகாலை 03.50 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தின் முகப்பு மண்டபத்தினூடாக சென்று கொண்டிருந்த போது, திடீரென சுருண்டு வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

மாரடைப்பு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென சந்தேகிக்கப்படுவதுடன் அவரது சடலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பளம் வழங்குவதில் சிக்கல்கள்...

5% கழிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் சம்பளம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள அசௌகரியம் காரணமாக சமுர்த்தி உதவிகள் வழங்குவதை ஒருவாரம் அல்லது இரண்டு வார குறுகிய காலத்துக்கு தாமதப்படுத்த நேரிடுமென அமைச்சரவை அறிவித்துள்ளது.

அந்தளவு பாரிய நிதி நெருக்கடி நிலவுகிறது. எவர் அரசாங்கத்தை கொண்டு நடத்தினாலும் திறைசேரிக்கு மக்களால் வழங்கப்படும் வரி வருமானம் மூலமே அனைத்து செலவினங்களையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எம்மில், எவரது தனிப்பட்ட செலவிலும் இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அனைத்து செலவுகளுமே மக்களின் வரியின் மூலமே இடம்பெறுகிறது. இதனால், மக்களுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.

17ஆவது பிரவாசி ...

தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் உட்பட வெவ்வேறு நாடுகளில் வாழும் 3,500 வெளிநாடு வாழ் இந்தியர்கள் கலந்துகொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் தாயாரின் மறைவுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில், ஆழ்ந்த இரங்கலும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

சபரிமலைக்கு புறப்பட்டவர்...

விமான நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.ஹற்றனை வசிப்பிடமாகக் கொண்ட 47 வயதானவரே கைதானார்.

வத்தளை பிரதேசத்திலுள்ள இரும்பு விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்த இவர், அவற்றை இந்தியாவில் விற்பனை செய்யவிருந்தமை விசாரணையில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபரின் பொதிக்குள்ளேயே ரி 56 தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஹம்பாந்தோட்டையில் எரிபொருள்...

விலைமனுக் கோரலை மேற்கொள்வதற்கும் அடிப்படை தகைமையை பூர்த்தி செய்யும் முதலீட்டாளர்களுக்கு விரிவான யோசனைகளை பெற்றுக் கொள்வதற்குமாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றுள்ள அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நூறு கோடி ரூபாவுக்கு விற்க...

வயதுடைய இரண்டு சந்தேகநபர்களே இதில்,கைதாகினர்.

சந்தேக நபர்களையும் தாதுகோபுரத்தையும் மேலதிக விசாரணைகளுக்காக வெயாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக விசேட பொலிஸ் செயலணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

05 கோடி ரூபா கப்பம் கோரி...

இருவர் ரி56 துப்பாக்கி மூலம் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர். எனினும் அதுதொடர்பில் எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லையென்றும் வெற்றுத் தோட்டக்கள்கூட அந்தப் பகுதியில் காணக்கிடைக்கவில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அந்தச் சம்பவததின் பின்னர் ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக சம்பந்தப்பட்ட வர்த்தகர் 05 கோடி ரூபா கப்பம் கோரியதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வாக்குமூலங்களில் தற்கொலை...

பெறப்பட்டுள்ளன. அத்துடன் 14 வழக்குப் பொருட்கள் அரசாங்க இரசாயன பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.இதற்கு மேலதிகமாக கையடக்கத் தொலைபேசியின் பகுப்பாய்வு வங்கி அறிக்கை மற்றும் ஏனைய ஆவணங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய தரவுகளை முன்வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேரடி சாட்சியை பெற்றுக்கொள்வதற்கான விசாரணையும் தொடர்கிறது. இந்தவகையில், சந்தேகர் எவரும் உறுதியாக இனங்காணப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தாலி வீதி விபத்தில் இலங்கை இளைஞன் பலி

இத்தாலியின் நாபோலி நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில், 20 வயது இலங்கை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த சனிக்கிழமை (7) அதிகாலை 1 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 18 வயதுடைய இலங்கையைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளும் காரும் மோதிக்கொண்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் ஒன்றுகூடல்

கண்டி, பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர்களின் கொழும்புக் கிளையின் ஒன்றுகூடல் இராஜகிரிய, புதகமுவ வீதியில் அமைந்துள்ள பேர்ட்ஸ் பார்க்கில் எதிர்வரும் (22) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த ஒன்றுகூடலில், போட்டிகள், நிகழ்ச்சிகள், கலைஞர்களின் இசை நிகழ்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிகழ்வுகளுக்கான அனுமதிச்சீட்டுக்களை செயற்குழு உறுப்பினர்களிடமும், அன்றைய தினம் (ஜனவரி 22) நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ள முடியுமென சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரியத் கப்ரால் அறிவித்துள்ளார்.

களுத்துறை ஆடற்கலைப் போட்டியில் அரையிறுதிக்கு தெரிவான அணிகள்

தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நாடு முழுவதிலும் உள்ள அறநெறி பாடசாலைகளுக்கு இடையே நடத்திவரும் ஆடற்கலைப் போட்டியின் களுத்துறை மாவட்டத்துக்கான ஆடற்கலைப் போட்டி மத்துகம நகர சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள 18 அறநெறி பாடசாலைகள் விண்ணப்பித்திருந்த போதும் 10 அறநெறி பாடசாலைகளே பங்குபற்றின. இதில் அரையிறுதிப் போட்டிக்கு இங்கிரிய, றைகம் கீழ்ப்பிரிவு, இந்து இளைஞர் ஸ்ரீ ராமர் மன்றம் நடாத்திவரும் விக்னேஸ்வரா அறநெறி பாடசாலையும் மத்துகம, யட்டதொல, சென் ஜோர்ஜ் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சம்பந்தர் அறநெறி பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பொதுநலவாய பாராளுமன்ற...

பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்க ஆகியோர் வரவேற்கவுள்ளனர்.

ஸ்டீபன் ட்விக்கின் இலங்கை விஜயத்தில் அவருடன் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டுப் பிரதானி செல்வி எமில் டேவிஸ்சும் வருகை தரவுள்ளார். பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளராக ஸ்டீபன் ட்விக் 2020 ஆகஸ்ட் (01) நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னர் அவர் ஐக்கிய இராஜ்ஜியத்தின் பாராளுமன்ற உறுப்பினராக 1997 முதல் 2005 வரை மற்றும் 2010 முதல் 2019 வரையும் பணியாற்றியுள்ளார்.

பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் ஸ்டீபன் ட்விகின் இலங்கை விஜயத்தின் போது, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

டொலரில் நட்டஈட்டை...

வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சமர்ப்பித்துள்ள பத்திரத்திற்கே, அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை ரூபாவில் நட்டஈட்டுத் தொகை மற்றும் ஏனைய பாதிப்புகளுக்கான செலவினங்களை அமெரிக்க டொலர் மூலம் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதனைத் தவிர எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறுமானால், அந்த அனர்த்தங்களின் போது ஏற்படும் பாதிப்புகள் கடற்கரைப்பகுதி துப்புரவு ஏற்பாடு, கழிவுகளை முகாமைத்தும் செய்தல், சூழல் பாதிப்பு ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நஷ்டஈடுகள் பிறப்படவுள்ளன.

இவற்றை அமெரிக்க டொலர் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சரவை அங்கிகாகரம் வழங்கியுள்ளது. மேற்படி பாதிப்புகளுக்கான நட்டஈட்டை குறித்த காப்புறுதி நிறுவனம் இலங்கை ரூபாவில் வழங்குமானால், ரூபாவின் பெறுமதி குறைவடையும் போது அதன் பலன்கள் கப்பலின் உரிமையாளரான காப்புறுதி நிறுவனத்திற்கே சென்றடையும் என்பதையும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். அதனை கவனத்திற்கொண்டே நட்டஈட்டுத் தொகையை ரூபாவில் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக டொலர்களில் பெற்றுக் கொள்வது சிறந்தது என்பதை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமுத்திர சுற்றாடல் அதிகார சபைஅறிவித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ATM பண மோடி...

வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இச்சந்தேகநபர்களில் பல்கேரிய நாட்டைச்சேர்ந்த இருவரும், கனடாவைச் சேர்ந்த ஒருவரும் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ள இலங்கையர்கள் இருவரும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் ஐவரையும் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்தனர். பத்தேகம மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் (23) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

காலி மாவட்டத்தில் கராபிட்டிய பத்தேகம மற்றும் கிக்கடுவ பகுதிகளிலுள்ள அரசாங்க வங்கிகளுக்கு சொந்தமான மூன்று ஏ.ரி.எம். இயந்திரங்களை உடைத்து சுமார் ரூபா 110 இலட்சத்திற்கும் அதிகமான பணத்தை இவர்கள் கொள்ளையடித்துள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் கடந்த டிசம்பர் 30 இல், இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர். முதலில் இந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் காணப்பட்ட 79 சிசிடிவி கமராக்களை ஆராய்ந்தே, வெளிநாட்டவர்கள், அவர்களுக்கு ஒத்துழைத்தவர்கள் கைதுசெய்யப்பட்ட னர். இவர்களில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாக விசாரணையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சார கட்டணங்களில் திருத்தங்கள்...

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு இந்நியதியின் அடிப்படையின் கீழ் இந்நிலையிலிருந்து மீள்வதற்கு தேவையான வகையில் சில நிவாரணங்களை வழங்கவேண்டுமென தெரிவித்துள்ளது. இந்நிலையிலே இதனைப் பரிந்துரைக்க காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதுவரை தற்போது நடைமுறையிலுள்ள பொது கொள்கை வழிகாட்டலை,இடைக்கால நடவடிக்கையாக திருத்தி,இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மின்சார சபை நடைமுறைப்படுத்தியுள்ளது.

உத்தேச மின் கட்டண திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மின்சார சபை மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சரவை தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க பொது பயன்பாட்டு ஆணைக்குழு திருத்தங்களை முன்வைத்தால், அதை நடைமுறைப்படுத்துவதற்கு மின்சார சபை நடவடக்கை எடுக்கும்.

அதேவேளை, இந்த வருடத்தில் மின் துண்டிப்பு இல்லாமல் தொடர்ந்து மக்களுக்கு மின்சாரத்தை வழங்கவேண்டுமென்றும் அத்துடன் உலக சந்தையில் எரிபொருள் விலைகள் குறைதல், நிலக்கரி விலைகளில் மாற்றம் மற்றும் அதிகரித்த மழையால் ஏற்படும் பிரதிபலன்களை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், மின்சார கட்டண விலை சூத்திரத்தை ஆறு மாதத்திற்கொரு முறை அறிமுகப்படுத்துமாறு அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளது.

மின் கட்டண திருத்தம் எதிர்காலத்தை...

முன்வைக்கப்பட்டுள்ள யோசனை மறறும் கட்டண திருத்தம் குறித்து பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் உரிய தரப்பினருடன் ஆய்வுசெய்யப்பட்டு வருகிறது.

அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால், பெப்ரவரி 15 ற்குள் அதனை முன்வைக்க வேண்டுமென அமைச்சரவை கேட்டுள்ளது. எமக்கு அதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. என்றாலும் எமக்கு இந்த யோசனைகள் நேற்று முன்தினமே கிடைத்தன. இதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சாதாரணமாக 45 அல்லது 50 நாட்கள் செலவாகும். அந்த நடவடிக்கைகளை நாம் தற்போது ஆரம்பித்துவிட்டோம். அதேவேளை, தொடர்ச்சியாக தடையின்றி மின் விநியோகத்தை முன்னெடுப்பதற்கான அவசியம் தொடர்பிலும் அவதானம் செலுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

ஐ.தே.க.,பொதுஜன பெரமுன...

செயற்பாட்டாளர்களை அழைத்து எந்தெந்த தேர்தல் தொகுதிகளில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் மற்றும் பொது சின்னத்தில் போட்டியிடும் தொகுதிகள் எவை என்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அதேவேளை போட்டியிடும் பிரதேசங்களில் வேட்பாளர்களை பகிர்ந்துகொள்வது எந்த அடிப்படையில் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் கட்சிகள் மற்றும் 54 அமைப்புகளும் பொதுஜன பெரமுனவுடன் 13 அமைப்புகளும் கைகோர்த்து செயற்படவுள்ளதாக அனைவரும் ஒரே குழுவாக செயற்படுவதற்கும் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி பேச்சுவார்த்தையில் பொதுஜன பெரமுன சார்பில் மஹிந்தானந்த அழுத்கமகே, ரோஹித்த அபேகுணவர்த்தன, சஞ்சீவ எதிரிமான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ருவன் விஜயவர்த்தன, வஜிர அபேவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டுள்ளதாக பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். அத்துடன் இரத்தினபுரி, கண்டி, புத்தளம், அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களிலிருந்து இரு கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கின் குரல்

சூரியபுர செயற்கைப் பசளை மத்திய நிலைய நிர்மாணப்பணி இடைநடுவில்!

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட சூரியபுர பிரதேசத்தின் 9ஆம் கட்டைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழான செயற்கைப் பசளை மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதாக, பொதுமக்கள் தெரிவித்தனர்.

கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் 30 மில்லியன் ரூபா செலவில் இச்செயற்கைப் பசளை மத்திய நிலையத்துக்கான நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டதாகவும் இருந்த போதிலும், அப்பணி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

இன்றுவரை இத்திட்டம் முழுமை பெறாமல் காணப்படுவதுடன், இந்நிலையத்தைச் சுற்றி பற்றைகள் வளர்ந்துள்ளன.

அப்பகுதியை காட்டு யானைகளும் கட்டாக்காலி நாய்களும் ஆக்கிரமித்துள்ளதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளதாகவும், பொதுமக்கள் தெரிவித்தனர்.

இச்செயற்கை பசளை மத்திய நிலையம் எப்போது இயங்குமென்ற எதிர்பார்ப்புடன் தாம் உள்ளதாகவும், பொதுமக்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்திய பொதுஜன பெரமுன

ரொட்டவெவ குறூப் நிருபர்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர், திருகோணமலை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் நேற்று (10) தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சிமன்றங்களுக்கான கட்டுப்பணத்தை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உட்பட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரல ஆகியோர் செலுத்தியுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்,

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் மொட்டுக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் இதற்கான தீர்வு விரைவில் அறிவிக்கப்படும்" என்றார்.

கலை மன்றங்களுக்கு பதிவு சான்றிதழ்கள்

பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று (10) நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச கலாசார எம்.எஸ்.ஜவ்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.ஏ.சாபிர் பிரதம அதிதியாகவும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

எமது சமூகத்தில் மறைந்து போயுள்ள பாரம்பரிய கலை, கலாசார விடயங்களை எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் முன்கொண்டு வருவதற்கான முயற்சியில் கலை மன்றங்கள் ஈடுபட வேண்டுமெனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

புதிய கணினி ஆய்வுகூடம் திறப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட மட். செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தின் கணினி ஆய்வுகூடத் திறப்பு விழா அப்பாடசாலையில் நேற்று (09) முன்தினம் பாடசாலை அதிபர் கே.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி, பிரதிக் கல்வி பணிப்பாளர் எஸ்.துஷ்யந்தன், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஆலோசகர் குலேந்திரகுமார், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலயக் கல்வி அலுவலகத்தின் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பாடசாலை வகுப்பறை திருத்தி அமைக்கப்பட்டு கணினி ஆய்வுகூடமாக மாற்றப்பட்டது.

பழுகாமம் இளைஞர் இலங்கையை சுற்றி சைக்கிளில் பயணம்

கல்லடி குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பழுகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் நிரோஜன் எனும் இளைஞர், சைக்கிளில் இலங்கைத் தீவகம் முழுவதிலும் 9 நாட்களில் தனியாகப் பயணம் செய்துள்ளார்.

கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி பழுகாமத்திலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்த இந்த இளைஞர், 1,299 கிலோமீற்றர் தூரம் வரை பயணம் செய்து, மீண்டும் இம்மாதம் 5ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்த இடமான பழுகாமத்தில் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

முதலாவது நாள் பழுகாமத்திலிருந்து 123 கிலோமீற்றர் தூரம் வரை பயணம் செய்து, திருகோணமலை மாவட்டத்தின் சேருநுவரைக்கு சென்றார். இரண்டாவது நாள் அங்கிருந்து 154 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து முல்லைத்தீவுக்குச் சென்றார்.

மூன்றாவது நாள் அங்கிருந்து 113 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து யாழ்ப்பாணத்தை சென்றடைந்தார்.

நான்காவது நாள் 116 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து மன்னாருக்கும் ஐந்தாவது நாள் 179 கிலோமீற்றர் சென்று புத்தளத்தையும் சென்றடைந்தார். ஆறாவது நாள் 141 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து கொழும்புக்குச் சென்று, அங்கிருந்து ஏழாவது நாள் மாத்தறைக்கு 156 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து, எட்டாவது நாள் 124 கிலோமீற்றர் தூரம் வரை கதிர்காமத்துக்குச் சென்றடைந்தார். ஒன்பதாவது நாள் 193 கிலோமீற்றர் தூரம் வரை பயணித்து மீண்டும் தான் பயணத்தை ஆரம்பித்த பழுகாமத்தை வந்தடைந்தார்.

அவ்வாறு அவர் பயணம் செய்த வேளையில், எட்டாவது நாள் அவரது சைக்கிளில் பழுது ஏற்பட்டு திருத்தம் செய்திருந்தார். ஒன்பதாவது நாள் அபாயகரமான மிருகங்களைச் சந்திக்க நேர்ந்ததாக, பாலச்சந்திரன் நிரோஜன் தெரிவித்தார்.

கந்தளாயில் கடத்தப்பட்ட 6 மாடுகள் பொலிஸாரால் மீட்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனி அலை நான்காம் கட்டைப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 6 எருமை மாடுகளை நேற்று (09) முன்தினம் மீட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வருடமும் 6 மாதங்களேயான இந்த எருமை மாடுகள், வெவசிரிகம பகுதியிலுள்ள வீடொன்றின் பின்புறத்தில் மறைத்துக் கட்டப்பட்டிருந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைதாகவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணையை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட எருமை மாடுகளை கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அறநெறி பாடசாலைக்கு இசைக்கருவிகள் அன்பளிப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காட்டித்தந்த எண்கோணேஸ்வரர் அறநெறிப் பாடசாலைக்கு வன்னிக் ஹோப் அவுஸ்திரேலிய நிறுவனத்தினால் இசைக் கருவிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

60 மாணவர்களையும் 6 ஆசிரியர்களையும் கொண்ட மேற்படி அறநெறிப் பாடசாலைக்கு இசைக் கருவிகள் வழங்கும் நிகழ்வில், வன்னிஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சீ.லவகுமாரி கலந்து கொண்டார்.

மேற்படி அறநெறிப் பாடசாலையில் இசைக் கருவிகள் இன்மையினால் பஜனை உள்ளிட்ட போட்டிகளுக்கு மாணவர்களினால் பங்குபற்ற முடியாமலிருந்தன.

தற்போது இசைக்கருவிகள் கிடைத்தமை வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக, மேற்படி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.

இதற்காக வன்னிஹோப் அவுஸ்திரேலிய நிறுவனத்துக்கு, மேற்படி அறநெறிப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நன்றி தெரிவித்தனர்.

நலன்புரி கொடுப்பனவுகள்; காத்தான்குடியில் செயலமர்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் நலன்புரிக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கு கள ஆய்வை மேற்கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வொன்று, காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (09) முன்தினம் நடைபெற்றது.

இதன்போது சமுர்த்தி நிவாரண நலன்புரி உதவிகள் உட்பட நலன்புரி நன்மைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு. உதயஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எம் எம்.ஜரூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பத்மா ஜெயராஜ் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

புதிய நிர்வாக கிராம உத்தியோகத்தர் நியமனம்

சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்

கல்முனை பிரதேச செயலகத்தின் புதிய நிர்வாக கிராம உத்தியோகத்தராக எம்.எச். ஜனூபா அஸ்ஹர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடிதத்தை நேற்று (09) முன்தினம் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி வழங்கி வைத்தார்.

கல்முனையைச் சேர்ந்த இவர், கிராம உத்தியோகத்தர் சேவையில் தரம் 01ஐச் சேர்ந்தவர் என்பதுடன், இவர் ஏற்கெனவே கல்முனைக்குடி 11, 13, 14 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கடமைமையாற்றியுள்ளார்.

ஜாதிக ஹொறண்ட மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.01.09
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4995
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,384,431.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 7 5 3 4 2 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1025
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 141,392,322.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 09 30 41 69

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1450
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,188,478.80
வெற்றி இலக்கினம் சிங்கம்
வெற்றி இலக்கங்கள் 6 1 2 5 1 9

ராசி சுப மலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 304
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,540,109.80
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 31 42 58 61
விசேட இலக்கினம் கும்பம்

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3237
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,625,857.20
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 15 18 34 47

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1343
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 292,060,630.00
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 30 40 48 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

பட்டியடிப்பிட்டி கிராமத்தில் மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

அக்கரைப்பற்று மத்திய நிருபர்

வீட்டுத் தோட்டச் செய்கைத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்றின் பட்டியடிப்பிட்டி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஜனசவிய சமூக நல்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று வனபரிபாலனத் திணைக்களத்தினால் அண்மையில் இவை வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது, 45 குடும்பங்களுக்கு பழக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்முனை வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் கையளிப்பு

சாய்ந்தமருது விசேட நிருபர்

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான ஒருதொகை மருந்துப் பொருட்கள் நேற்று (10) வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்பு மாநகர ரோட்டரிக் கழகத்தினது 'மக்களுக்காக மக்களிடமிருந்து' எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்படி வைத்தியசாலைக்கு இம்மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு மாநகர ரோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவர்களான பைஸல் பஹெளடீன் மற்றும் அமான் அஷ்ரப், கொழும்பு மாநகர ரோட்டரிக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர், வைத்தியர்.எஸ்.ராஜந்திரனிடம் மருந்துகளை கையளித்தனர்.

கிழக்கின் குரல்

கிழக்கு மாகாணத்தில் தினசரி பசும்பால் உற்பத்தி அதிகரிப்பு

மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்

தம்பலகாமம் குறூப் நிருபர்

தற்போது கிழக்கு மாகாணத்தில் தினசரி திரவப்பால் உற்பத்தியானது ஒரு இலட்சத்து 64 ஆயிரம் லீற்றராக அதிகரித்துக் காணப்படுவதாக, அம் மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களுடன் நேற்று (09) முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பின்போதே, அவர் இதனைக் கூறினார்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் திரவப்பால் உற்பத்தியானது மேற்கூறப்பட்ட கணக்கெடுப்பில் பாதியாக இருந்தது. ஆகையினால், கிழக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பு சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும் பட்சத்தில், திரவப்பால் உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

இம்மாகாணத்தில் சுதந்திரமாகத் திரியும் கால்நடைகளினால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் 'நிலையான பால் பண்ணை' எனும் திட்டத்தின் கீழ், 52 மில்லியன் ரூபா செலவில் மாதிரிப் பால் பண்ணைகள் உருவாக்கப்பட்டதாகவும், ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

உயிர்வாயு அமைப்பு, கால்நடைக் கொட்டகை, இயற்கை உர உற்பத்தி அலகு, கால்நடைத் தீவனத்துக்கு புல் வளர்க்க ஏற்ற நிலம், மழைநீர் சேகரிப்பு அலகு ஆகியவை இத்திட்டத்திலுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், நிலையான பால் பண்ணைகளை முன்மாதிரியாகக் கொண்ட கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களமானது, இத்திட்டத்தில் விவசாயிகளை இணைத்துக்கொள்ளும் வகையில் பல விசேட திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். .

இவ்வாறிருக்க, திருகோணமலை மாவட்டத்தின் உப்புவெளி பிரதேசத்திலுள்ள அரசாங்கப் பண்ணையில் மாதிரி உயிர்வாயு ஆலையொன்றை நிர்மாணிப்பதற்கு 32 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திரவப்பால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு கிழக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் கால்நடைகளின் மரபணுவை மேம்படுத்தும் விசேட பொறிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பனிச்சையடி கிராம பொதுச்சுகாதார பரிசோதகர் வீட்டில் திருட்டு; மூவர் கைது

மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்குவில் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பனிச்சையடிக் கிராமத்திலுள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் தங்கநகைகளையும் பணத்தையும் திருடிய குற்றச்சாட்டில் மூவரை நேற்று (09) முன்தினம் கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து திருடப்பட்ட நகைகளைக் கைப்பற்றியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பொதுச் சுகாதார உத்தியோகத்தரும் அவரது மனைவியும் கடந்த 3ஆம் திகதி தமது வீட்டைப் பூட்டிவிட்டு கடமைக்காக வெளியில் சென்றுவிட்டு, மீண்டும் பிற்பகல் ஒரு மணிக்கு வீடு திரும்பிய போது, வீட்டின் கூரை உடைக்கப்பட்டிருந்ததுடன், வீட்டு அறையிலுள்ள அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 27 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, காப்பு, மோதிரம் உட்பட சுமார் 17 பவுண் தங்கநகைகளும் பணமும் திருட்டுப் போனமையை அவதானித்திருந்தனர். இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார்,

இச்சந்தேக நபர்களை அவர்களது வீடுகளில் வைத்துக் கைது செய்தனர்.

இதன்போது 36, 39, 43 வயதுடையவர்களையே இவ்வாறு கைது செய்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவர்களிடமிருந்து திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் இராஜினாமா கடிதம் கையளிப்பு

கல்முனை மத்திய, சம்மாந்துறை கிழக்கு தினகரன், சவளக்கடை குறூப் நிருபர்கள்

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் தனது இராஜினாமாக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணையாளருக்கு நேற்று (09) முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.சி.எம்.சஹீல், எம்.எஸ்.சரீபா, எம்.ரீ.பௌசுள்ளாஹ், கே.எம்.இன்பவதி, என்.கோவிந்தசாமி, கே.குலமணி, ஆர்.வளர்மதி ஆகியோரும் தமது இராஜினாமாக் கடிதங்களை சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட்டிடம் கையளித்துள்ளனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்; மட்டக்களப்பில் கலந்துரையாடல்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் மற்றும் அலுவலர்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தனின் வழிகாட்டுதலில் மாவட்ட செயலகத்தில் நேற்று (09) முன்தினம் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்வது தொடர்பாக மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார்.

வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பாதுகாப்பு, வேட்புமனுவை ஒப்படைக்கும் போது வாகனங்களின் உள்நுழைகை மற்றும் வெளிச்செல்கை, வேட்புமனுவை ஒப்படைக்கும் நபர்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன. மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்துக்கு முன்பாக பொலிஸ் தற்காலிக சோதனைச் சாவடி அமைப்பதற்கான கோரிக்கையும் இங்கு முன்வைக்கப்பட்டது.

சமஷ்டியை வலியுறுத்தி திருமலையில் பேரணி

தோப்பூர், கல்லடி குறூப் நிருபர்கள்

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றுபட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் இறுதி நாளான நேற்று (10) திருகோணமலை மாவட்டத்திலும் மட்டக்களப்பு காந்தி பூங்காவிலும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் 'ஒருமித்த குரலினை உரக்கச் சொல்வோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் மேற்படி கோரிக்கையை முன்வைத்து கடந்த 5ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. திருகோணமலை உட்துறைமுக வீதியிலிருந்து அஞ்சல் சந்தியூடாக மக்கேஷர் மைதானம் வரை கவனயீர்ப்புப் பேரணி சென்றது.

இவ்வார்ப்பாட்டங்களில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகச் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

பெரும்போக அறுவடைக்குரிய வயல்களை கிண்ணியா பிரதேச செயலாளர் பார்வை

கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடை மேற்கொள்ளப்படவுள்ள வயல்களை, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி கடந்த சனிக்கிழமை சென்று பார்வையிட்டுள்ளார்.

விவசாயிகளினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைக்கமைய அறுவடை தொடர்பாக ஏற்பாடுகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அறுவடையின் போது ஏற்படும் சிரமங்களை போக்கி வெற்றிகரமாக அறுவடையை முன்னெடுப்பதற்கு தன்னாலான ஒத்துழைப்பை வழங்குவதாக, கிண்ணியா பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழுவின் மீளாய்வுக் கூட்டம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பான சர்வமத செயற்குழுவினுடைய கடந்த 2022ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம், மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியிலுள்ள கூட்டுறவு மண்டபத்தில் நேற்று (10) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழுவின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்ட சர்வமதத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கடந்தகாலச் செயற்றிட்டங்களை நிறைவேற்றிய போது கிடைத்த அனுகூலங்கள், பிரதிகூலங்களை வெளிப்படுத்தினர்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள், பன்மைத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்டங்கள் தோறும் பிரதிநிதிகளை வரவழைத்து வதிவிடப் பயிற்சியுடன் கூடிய சமாதானப் பேரணிகளை நடத்தியமை, சமூகங்களிடையே சகவாழ்வை ஏற்படுத்தும் நோக்கில் எல்லைக் கிராமங்களில் பயிற்சிகளை நடத்தியமை, புதிய அரசியல் யாப்பில் சிறுபான்மைச் சமூக நலன் சார்ந்து உள்வாங்கவேண்டிய முன்மொழிவுகள், உள்ளூராட்சிமன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கு அரசியலில் வலுவூட்டுவதற்கான பயிற்சிகள், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரின் வெறுப்புப் பேச்சுகள் மற்றும் தேவையற்ற பதிவுகளால் ஏற்படும் தாக்கங்களை தெளிவுபடுத்தும் செயலமர்வுகள், பல்லாளுமை கொண்ட சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வுகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் மட்டக்களப்பில் இனங்களிடையே பிணக்குகள் ஏற்படாமல் தடுத்தமை, மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் காணி உள்ளிட்ட பல பிரதேசங்களில் 800 கால்நடைகள் தொண்டையடைப்பான் தொற்றுநோயினால் உயிரிழந்த நிலையில் அரசாங்க அதிபரூடாக மாவட்ட கால்நடைத் திணைக்களத்தை அணுகி கட்டுப்படுத்தியமை உள்ளிட்ட செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டன.

குருக்கள்மடம், திருப்பழுகாமம் கோயில்களில் திருவாசகமுற்றோதல்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள்மடம் முருகன் கோயிலிலும் திருப்பழுகாமம் ஸ்ரீ அருள்மிகு சிவன் கோயிலிலும் ஆருத்ரா தரிசனத்தை சிறப்பிக்கும் வகையில் அக்கோயில்களில் திருவாசகமுற்றோதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, திருவாசகமுற்றோதல் நடைபெற்றது. குருக்கள்மடம் முருகன் கோயிலில் ஆன்மிகப் பேருரையை ஆன்மிகப் பேச்சாளர் மு.தங்கவேலாயுதம் நிகழ்த்தினார். ஆசியுரையை மேற்படி முருகன் கோயில் பிரதம குரு ஜி.என்.திருக்கணேஸ்வர குருக்கள் நிகழ்த்தினார்.

மேற்படி இரு கோயில்களிலும் பக்தர்களின் நல்லிணைவுடன் திருவாசகமுற்றோதல் இனிதே நடைபெற்றது.

பொங்கல் தினத்தில் திருக்கோவிலில் பட்டம் ஏற்றும் விழா

காரைதீவு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் தைப்பொங்கல் விழாவையிட்டு ஐந்தாவது தடவையாக இம்முறையும் பட்டம் பறக்க விடும் விழா எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளதாக, இதற்கான ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோயில் முன்றலில் இவ்விழா நடைபெறவுள்ளதுடன், சிறந்த பட்டங்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

அத்துடன், இவ்விழாவின் சிறந்த புகைப்படப் பிடிப்பாளருக்கான பரிசிலும் உடனடியாக வழங்கி வைக்கப்படுமெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இரத்ததான முகாம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவி வரும் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தினால் மாபெரும் இரத்ததான முகாமொன்று நாவற்குடா சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நேற்று (09) முன்தினம் நடத்தப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் புளொரன்ஸ் பாரதி கெனடி தலைமையில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் பலர் கலந்து கொண்டு இரத்ததானமளித்தனர்.

இந்த இரத்ததான முகாமில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிராந்திய இரத்த வங்கிப் பிரிவின் வைத்தியர் ஜீ.சுகன்யா தலைமையிலான இரத்த வங்கி உத்தியோகத்தர்கள் சேவையாற்றினர்.

ஆரையம்பதியில் தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவி

புதிய காத்தான்குடி, பெரிய போரதீவு தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மின்னொழுக்குக் காரணமாக பரவிய தீயினால் பாதிக்கப்பட்ட அக்குடும்பத்துக்கு மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் தொழிலதிபருமான தேசபந்து எம்.செல்வராசா மற்றும் ஆனந்தகிரி அறப்பணி சபையினரும் உதவியளித்துள்ளனர்.

தீயினால் பாதிக்கப்பட்ட இக்குடும்பத்தை நேரில் சென்று பார்வையிட்டு கலந்துரையாடிய மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர், அக்குடும்பத்துக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுத்துள்ளதுடன், 50,000 ரூபா நிதியுதவியையும் கடந்த சனிக்கிழமை வழங்கினார்.

இதேவேளை, இக்குடும்பத்துக்கான ஆடைகள், வீட்டுக்கூரைக்கான மரங்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆனந்தகிரி அறப்பணி சபையினர் வழங்கினர்.

ஆரையம்பதி பிரதேசத்தில் செல்வாநகர் கிழக்கு நாவலர் வீதியை அண்டி அமைந்துள்ள 3 பேரைக் கொண்ட மேற்படி குடும்பத்தினரின் வீடு உட்பட வீட்டிலிருந்த உடைமைகள், கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி இரவு திடீரென ஏற்பட்ட தீயினால் எரிந்து நாசமாகின. இக்குடும்பத்தினரின் ஆடைகள், கற்றல் உபகரணங்கள், சுயதொழில் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் தீக்கிரையாகியிருந்தன.

தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 49ஆவது நினைவேந்தல் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணம் முற்றவெளில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை நினைவாலயத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் இறுதிநாள் பொலிஸாருடன் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்; யாழ். விசேட நிருபர்)

மண்டைக்கல்லாற்றில் உவர்நீர் உட்புகுவதை தடுக்க நடவடிக்கை

வனவளத்திணைக்கள பகுதிகளை விரைவில் விடுவிக்க விவசாயிகள் கோரிக்கை

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட மண்டைக் கல்லாற்றுக்கு ஊடாக பயிர்செய்கை நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகுதலை தடுக்கும் வகையில் தடுப்பணை அமைப்பதற்கு ஏற்ற வகையில் வன வளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை விரைவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட மண்டைக் கல்லாற்றுக்கு ஊடாக பயிர்செய்கை நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகுதலை தடுக்கும் வகையில் சுமார் 495 மில்லியன் ரூபா செலவில் கதவுகளுடன் கூடிய உவர் நீர் தடுப்பணையை அமைக்கும் பணிகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி பூநகரி மண்டைக்கல்லாற்றுக்கான உவர் நீர் தடுப்பணை இதுவரை அமைக்கப்படாமையினால் கடல் பெருக்கு காலங்களில் கடல் நீரானது, மண்டைக்கல்லாறினூடாகவும் முடக்கனாற்றினூடாகவும் உட்புகுந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், குஞ்சு குளம் மண்ணியாகுளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் ஆறாயிரத்து 100 ஏக்கர் வரையான பயிர் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளதுடன் தொடர்ந்தும் இதன் தாக்கம் ஆணை விழுந்தான், அக்கராயன்குளம், மணியங்குளம் ஆகிய பகுதிகளும் உவர் நீர் பாதிப்புக்களுக்குள்ளாகி வருகின்றன.

விவசாயிகள், விவசாய அமைப்புக்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகளிடம் விடுத்த கோரிக்கைகளுக்கமைவாக சுமார் 495 மில்லியன் ரூபா செலவில் கதவுகளுடன் கூடிய உவர் நீர் தடுப்பணையை அமைக்கும் பணிகள் உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது. வேலைத்திட்டத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக வனவளத்திணைக்களத்திடமிருந்து குறிப்பிட்ட சில பகுதிகளை விடுவிக்க வேண்டியுள்ளதாகவும் அவ்வாறு விடுவிக்கப்பட்டதன் பின்னர் தடுப்பணை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அபிவிருத்தி வேலைகள் நீண்டகாலத்திற்கு பின்னர் தமது பிரதேசத்திற்கு கிடைத்துள்ளதாகவும் இதனை விரைவாக முன்னெடுக்கக்கூடிய வகையில் வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை விரைவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலிகளின் ஆயுதங்களை தேடும் அகழ்வுப் பணி இடைநிறுத்தம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்ட இடத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் எந்தவித ஆயுதங்களும் கிடைக்காமையால் அகழ்வுப்பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கொக்குவில் பொற்பதி வீதியில் தனியாருக்கு சொந்தமான காணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற பதிவாளர் தலைமையில், கோப்பாய் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், ஆகியோரின் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

இதன்போது பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். நான்கு இடங்களில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் எவ்வித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை. அதனையடுத்து மாலை அகழ்வு பணிகள் கைவிடப்பட்டன. அகழ்வுப் பணிகள் இடம்பெறும் இடத்திற்கு அருகிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவராகவிருந்த மாத்தையாவினுடைய முகாம், மற்றும் விடுதலைப் புலிகளின் சட்ட, மருத்துவக்கல்லூரியும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமஷ்டியை வலியுறுத்திய

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நிறைவு

பருத்தித்துறை விசேட நிருபர்

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு மேற்கொண்டு வரும் கவனயீர்ப்பு போராட்டத்தின்இறுதிநாள் போராட்டம் நேற்றைய தினம் இடம்பெற்று வருகிறது.

வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களில் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கவனயீர்ப்பு போராட்டம், யாழில் நாவற்குழி சந்தியில் இடம்பெற்றுவருகிறது.

"ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்தி அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. கடந்த 05 திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்றைய 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

பருத்தித்துறை நகர சபையில் மீண்டும் கூட்டமைப்பு ஆட்சி!

புதிய தவிசாளராக நவரட்ணராஜா தெரிவு

கரவெட்டி தினகரன் நிருபர்

பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியமைத்துள்ளது. கூட்டமைப்பின் சார்பில் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டவர் இரண்டு மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமையால் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளராக இருந்த யோ.இருதயராஜா (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) கடந்த மாதம் பதவி விலகியதைத் தொடர்ந்து உருவான தவிசாளர் வெற்றிடத்துக்கு நேற்று தேர்தல் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா போட்டியிட்டார். அவரை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி., சமத்துவக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் என 8 பேர் வாக்களித்தனர். அதேவேளை, கூட்டமைப்பின் தவிசாளர் வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 6 வாக்குகளையே பெற்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்களும் அவரை ஆதரித்தனர். அதன்பிரகாரம் பருத்தித்துறை நகர சபையின் புதிய தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நவரட்ணராஜா தெரிவு செய்யப்பட்டார். ஈ.பி.டி.பியின் ஒரு உறுப்பினர் சபைக்கு நேற்று சமூகமளிக்கவில்லை.

கிராஞ்சி ஆர்ப்பாட்டக் குழுவினரின் கடலட்டை விவகார குற்றச்சாட்டு தவறு!

கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர் த. மகேந்திரன்

கடலட்டை பண்ணை தொடர்பில் கிராஞ்சி ஆர்ப்பாட்டக் குழுவைச் சேர்ந்த நிரஞ்சன் மற்றும் பரிமளா ஆகியோர் முன்வைத்த குற்றச்சாட்டு பொய்யானது என கிறஞ்சி சிறிமுருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர் த. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் அண்மைக்காலமாக கடலட்டை பண்ணை விவகாரம் பேசு பொருளாக மாறியிருக்கிறது. நீண்டகாலமாக கடலட்டை பண்ணைக்கான பயணத்தை மேற்கொண்டு வருகிறோம். அட்டைப்பண்ணை செய்கையாளருக்கான காணி அனுமதிப்பத்திரம் கடந்த 7ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இலவங்குடா மண்டபத்தில் வைத்து அனைவருக்கும் கையளிக்கப்பட்டது.

இதற்கான விண்ணப்பங்களை நாம் பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்து அவர் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளரை தொடர்புகொண்டு விண்ணப்பத்தில் கோரியுள்ள இடங்கள், அந்த இடம் வேறு தொழிலாளர்களுக்கு இடையூறாக இருக்கிறதா என ஆராய்ந்து நாரா நிறுவனத்தால் ஏற்கனவே அளவீடு செய்யப்பட்ட இடம் என்பதைக் கண்டறிந்து 82 அட்டைப்பண்ணை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. .

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பணிப்பாளர் ஏற்கனவே பிரதேச செயலாளரிடம் தகவலறியும் சட்டத்தின் கீழ் இவ்விடயத்தை கோரியிருந்தபோது அவர் கிராஞ்சியில் எந்தவித கடலட்டை பண்ணைக்கான அனுமதிப்பத்திரங்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டதாக கூறியிருக்கிறார்.

உண்மையில் எமக்கு கடலட்டைப் பண்ணைக்கான அனுமதியை வழங்கியது கடந்த மாதம் 7ஆம் திகதியாகும். அனுமதிப்பத்திரத்துக்கான பதிவுத்திகதி 2023.01.02ஆம் திகதி இடம்பெற்றது. இவர்களுக்கான தகவலறியும் சட்டம் 2022ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியாக இருக்கலாம்.

நாங்கள் சிறகுவலை பாய்கிற அதே இடத்தில் ஒரு அனுமதியும் இல்லாமல் தான் பண்ணையை அமைத்தோம். திணைக்கள அதிகாரிகள் நேரில் வந்து ஆராய்ந்து பார்த்து உண்மையில் செய்கையில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தியே அனுமதி தருவார்கள். வெறுமனே எதையும் செய்யாமல் கேட்டுக்கொண்டிருந்தால் எதுவும் கிடைத்திருக்காது. கடந்த 2020ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று வருடங்களாக அது சம்பந்தமான எந்த முடிவுகளையும் திணைக்களங்கள் எடுக்காமல் நாங்கள் தற்துணிவுடன் எமது சங்கங்கள் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து 36 பண்ணைகளை அடைத்திருந்தோம்.

எமது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென செயற்படும் அதிகாரிகளை பிழையெனக்கூறி ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கமும் பிழை, அமைச்சரும் பிழை, நெக்டா பிழை, கடற்றொழில் திணைக்களம் பிழை, பிரதேச செயலகம் பிழை என முழுப் பேரையும் பிழையென்றால். நீங்களா சரியாக செயற்படுகிறீர்கள்?

ஏற்கனவே அந்தப் பெரிய நிலப்பரப்பை உங்களது ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு அளவீடு செய்ய வந்த அதிகாரிகளுக்கு இடையூறு செய்ததாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது, கிராஞ்சியில் அட்டைப்பண்ணை அமைப்பதால் மீன் வளம் குறைகின்றது, ஏனைய தொழிலாளிகளுக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்பதெல்லாம் பொய் மீன் வளம் குறைவதற்கு எரிபொருள் இன்மையே காரணம். மீனவ சமூகத்தைச் சேர்ந்த நாங்கள் அமைச்சரிடம் சென்றுதான் எமது குறைகளைச் சொல்லமுடியுமே தவிர அவரது அதிகாரத்தை பயன்படுத்தி செய்யமுடியாது. சட்டதிட்டத்தின்படியே எதனையும் செய்யலாம். இதனை அனைவரும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

கடும் காய்ச்சலினால் 2 வயது குழந்தை பலி

சாவகச்சேரி விஷேட நிருபர்

மீசாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இரண்டு வயது பெண் குழந்தையொன்று கடும் காய்ச்சல் காரணமாக நேற்றுமுன்திழனம் 09/01 திங்கட்கிழமை மதியம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு நாட்கள் தொடர்ந்து காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்த சிறுமியின் சடலம் பிரேதபரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவு

பொருளாதார நெருக்கடியால் 931 குழந்தைகள் பாதிப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் பொருளாதார நெருக்கடி காரணமாக 6465 குடும்பங்களும், 931 குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் கேட்கப்பட்ட போதே அவர் அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 6465 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 931 குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 213 கர்ப்பிணித் தாய்மாரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைசாரா, அங்கீகாரமற்ற செயற்பாடுகளால் யானைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை

திறப்பனை வன ஜீவராசிகள் அலுவலகம் தெரிவிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

திறப்பனை பிரதேச செயலகப் பிரிவில் காட்டு யானைகள் பயணிக்கும் வழித்தடங்கள் தடைப்பட்டுள்ளதாகவும்,தனியார் காணிகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள முறைசாரா அங்கீகாரமற்ற வேலிகளாலும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக திறப்பனை வன ஜீவராசிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக திறப்பனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 41 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாதம் ஒரு முறையாவது இரு கிராமங்கள் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானைகள் பயணிக்கும் வழித்தடங்களை அடைத்து பல்வேறு தனியார் நிறுவனங்களும், சில விவசாயிகளும் அனுமதியின்றி கட்டியுள்ள மின்வேலிகளாலேயே கிராமங்களை நோக்கி இந்த யானைகள் படையெடுப்பது சர்வசாதாரணமாகியுள்ளது.

மின்சார வேலிகளை அமைப்பதற்கு தேவையான உபகரணங்கள் சந்தையில் தாராளமாக கிடைப்பதால், விவசாயிகள் அவற்றை விலைக்கு வாங்கி தமது இஷ்டத்துக்கு ஏற்ப மின் வேலிகளை அமைத்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த மின்கம்பிகளில் அதிகளவு மின்சாரம் பாய்ந்து, இதில் யானைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படுவதாகவும், அதனால், யானைகள் இடம் பெயரும் வழித்தடத்தை அடைப்பதால், உணவு தேடி, மாற்று வழிகள் வழியாக, கிராமங்களுக்குச் செல்வதாகவும் , வன விலங்குகள் காரியாலயம் கூறுகின்றது.

இவ்வாறான அங்கீகாரமற்ற, முறைசாரா மின் கம்பங்களை அகற்றி அவற்றை ஒழுங்கு முறையில் அமைத்தல் வேண்டும், இல்லையெனில் திறப்பனை பிரதேச செயலகப் பிரிவில் யானை மனித மோதல்கள் எதிர்காலத்தில் மோசமடையும் நிலை உண்டாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனன்கோட்டை குட்டிமலை சேவா பியஸ கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல்

பேருவளை விசேட நிருபர்

பேருவளை சீனன்கோட்டை குட்டிமலையில் அமைக்கப்படவுள்ள சேவா பியஸ கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் பேருவளை பிரதேச செயலாளர் எம். ரன்சித் பெரேரா தலைமையில் நடைபெற்றது.

சீனன்கோட்டை குட்டிமலை தர்கா வீதியில் உள்ள அரச காணியில் பேருவளை அத் தக்வா அமைப்பின் தலைவர் எம்.ஏ.எம்.அஸ்லம் அஷ்ரபின் நிதியொதுக்கீடு மூலம் சேவா பியஸ கட்டடம் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் (751) சீனன் கோட்டை கிராம சேவா அதிகாரி வட்டாரத்திற்கு குறைபாடாக இருந்து வந்த சேவா பியஸவுக்கும் இவ்வமைப்பினூடாக தீர்வு கிடைக்கிறது.

குட்டிமலை ஜலாலிய்யா தர்கா பள்ளிவாசல் இமாம்களான மௌலவி எம்.டப்ளியு.எம். பஹ்ருத்தீன்(மிஸ்பாஹி),மௌலவி எம்.இக்ராம் (நுலாரி), பள்ளிவாசல் நிர்வாகிகள்,மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். எம்.அம்ஜாத்,நகர சபை உறுப்பினர் சியாம் முனவ்வர்,நகர சபை வேட்பாளர் ஷரபான் முஸம்மில்,ஸலீம் ஹாஜியார்,ஹிகாம் அபுல்ஹஸன் இபாம் ஸாலி உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பூகொட குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக பொறுப்பேற்ற அதிபர் எம். எஸ். எம். அவ்ன், வித்தியாலயத்தில் கடமைகளை பெறுப்போற்றுக் கொண்ட போது... (படங்கள் பூகொட தினகரன் நிருபர்)

நுவரகம் பளாத்தவில் வருமானம் குறைந்த மக்களுக்கு இலவச பால்மா

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுர மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக பால் மா வழங்கும் நிகழ்வு அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜி. சேனாரத்ன தலைமையில் மத்திய முவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை ஆயுதப்படையின் 03 வது கவச படைப்பிரிவின் ஒருங்கிணைப்பில் போன்டேராவின் அனுசரணையுடன் இந்த இலவச பால் மா வழங்கும் வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் கீழ் குறைந்த வருமானம் பெறும் 145 குடும்பங்களுக்கு பால் மா விநியோகிக்கப்பட்டுள்ளது. நிலையான வருமானமில்லாத 05 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் தகுதியான பயனாளிகளாக இதில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் மத்திய நிவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவின் உதவி பிரதேச செயலாளர் சஞ்சய் லக்மால், இலங்கை ஆயுதப்படையின் 03வது கவசப் படைப்பிரிவின் தளபதி லெப்டினன்ட் கேணல் என். வி.ஏ.எம்.விதானகே மற்றும் பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

ஐக்கிய காங்கிரஸ் கற்பிட்டியில் கட்டுப்பணம் செலுத்தியது

2023 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டம் கற்பிட்டி பிரதேச சபைக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி நேற்று புத்தளம் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

இந்நிகழ்வில் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளரும், புத்தளம் மாவட்டப் பொறுப்பாளருமான ஸப்வான் சல்மான் மற்றும் கற்பிட்டி பிரதேச அமைப்பாளர் பாரூக் முஹம்மது ராஃபி ஆகியோர் கலந்து கொண்டனர். ஐக்கிய காங்கிரஸ் கட்சி புத்தளம் மாநகர சபை, புத்தளம் பிரதேச சபை உள்ளிட்ட ஏனைய சபைகளிலும் போட்டியிட உள்ளதோடு, அவைகளுக்கான கட்டுப் பணம் எதிர்வரும் தினங்களில் செலுத்தப்படும் என கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளரும் புத்தளம் மாவட்டத்திற்குப் பொறுப்பாளருமான ஸப்வான் சல்மான் தெரிவித்தார்.

வரலாற்றில் எதிர்க்கட்சியின் வகிபாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைத்தது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

74 வருட வரலாற்றில் எதிர்க்கட்சியின் வகிபாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைத்ததாகவும், மக்களால் கோரப்படும் முறைமை மாற்றத்தின் இரண்டு முக்கிய அம்சங்களாக "பிரபஞ்சம்"மற்றும் "மூச்சு" வேலைத்திட்டங்கள் அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம்'வேலைத் திட்டத்தின் கீழ் 67 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம்(5,000,000) ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் வண்டியொன்று இரத்மலானை,லலித் அதுலத்முதலி கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டுரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,...

சுகாதார அமைச்சும் கல்வி அமைச்சும் கூட வங்குரோத்து நிலையில் உள்ள வேளையில், அந்த அமைச்சுக்களின் கீழ் உள்ள நிறுவனங்களின் கோரிக்கைகளை தற்போதைய எதிர்க்கட்சியே நிறைவேற்றுவதாகவும் இந்நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க வேண்டுமாயின் டொலர்கள் தேவை எனவும், ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே தற்போது அதற்கான திறனைப் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி,எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்களுக்காக பல பணிகளை செய்து கொண்டிருக்கும் போது,சோசலிசம் பற்றி தம்பட்டம் அடிக்கும் சில அரசியல் குழுக்கள் தம்மை தூற்றி சேறு பூசும் விதமாக பேசுவதாகவும்,எதிர்க்கட்சியில் இருந்தவாறு மக்களுக்காகவும், பாடசாலை பிள்ளைகளுக்காகவும், தாய்மார்களுக்காகவும் போட்டித் தன்மையில் சேவையாற்ற முன்வருமாறும் அழைப்பு விடுத்தார்.

இணையம் சமூகத்தில் விபரீதங்களை உருவாக்கினாலும்,அதை நல்ல முறையில் பயன்படுத்தி, தகவல்,தரவு,விஞ்ஞான அறிவியலை அணுகி ஸ்மார்ட் மாணவரையும்,ஸ்மார்ட் குடிமகனையும் உருவாக்க வேண்டும்.

சில பாடசாலைகள் 2022 இல் போக்குவரத்துச் செலவுகளுக்காக ஒரு மில்லியனுக்கும் அதிகமாக செலவிட்டுள்ளன.இந்த பஸ்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் அந்த பணத்தையும் பெற்றோர்கள் எதிர்காலத்தில் மிச்சப்படுத்திக் கொள்வார்கள்.

அரசு,பாடசாலைகளுக்கு கட்டடங்களை வழங்கினாலும்,பராமரிக்கப்படுவதில்லை,இந்த பராமரிப்பு மற்றும் பேணல் ஒவ்வொரு ஆண்டும் நடக்க வேண்டும் எனவும், அதற்கென ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பு இருக்க வேண்டும் எனவும்,இவ் அபிப்பிராயம் மக்களிடம் போன்றே ஆட்சியிலும் உருவாக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன வருடாந்த மாநாடு

பேருவளை விசேட நிருபர்

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன வருடாந்த மாநாடு (8) பேருவளை மருதானையில் உள்ள முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் இல்லத்தில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் எம்.இக்பால் ஸம்ஸுதீன் ஜே.பி.தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டின் 2023 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக களுத்துறை முன்னாள் நகர பிதா எம்.எம்.எம்.ஜௌபர் தெரிவு செய்யப்பட்டார்.

புதிய நிர்வாகிகள் தெரிவின் பின்னர் உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண வைபவமும் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன முன்னாள் தலைவருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்,பேருவளை நகர சபை தலைவர் மஸாஹிம் முஹம்மத், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாளிபர் முன்னணிகள் சம்மேளன தேசியத் தலைவர் லுக்மான் சஹாப்தீன், தேசிய உப தலைவர்களான ஷாம் நவாஸ்,பௌஸர் பாரூக் பல முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.செயலாளர் றிஸ்மி மஹ்றூப் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் முஸ்லிம் கிராமங்களின் குறைபாடுகள் பற்றி இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம் தேசிய சாதனை

புத்தளம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கர்நாடக சங்கீதமும் முஸ்லிம் மாணவர்களுக்குமான போட்டி நிகழ்ச்சியில் தேசிய மட்ட போட்டியில் புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரி மாணவிகள் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்று சாதித்துள்ளனர்.

மாணவிகள் கலந்து கொண்ட அல் ஹிகாயா வல்பைத் நிகழ்ச்சியில் முதலிடத்தையும்,

நஷீத் நிகழ்ச்சியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். அல் ஹிகாயா வல்பைத் நிகழ்ச்சியை தயாரித்து பயிற்றுவித்த ஆசிரியை திருமதி சரூபியா அவர்களுக்கும், நஷீத் நிகழ்ச்சியை தயாரித்து பயிற்றுவித்த பதில் அதிபர் திருமதி ஸரீனா பர்வீன் அவர்களுக்கும், மாகாண மட்டம் இரண்டாம் இடம் பெற்ற கஸீதா நிகழ்ச்சியை பயிற்றுவித்த சர்மிளா ஆசிரியை, மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, சாதனை நிகழ்த்திய மாணவர்களுக்கும் கல்லூரி நிர்வாகம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

கம்மடுவ, நாகல தோட்டத்திற்கு செல்லும் பாலம் சேதமடைவு

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் அம்பன்கங்க கோறல பிரதேச செயலாளர் பிரிவில் கம்மடுவ, நாகல, தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியின் பாலம் சேதமடைந்துள்ளது.

சேதமடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக தற்காலிக பாலம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகஅம்பன்கங்க கோறல பிரதேச செயலாளர் பி. பி. சேனாதிர தெரிவித்தார்.

இப்பாலம் அண்மையில் மாத்தளை மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனால் இப் பாதையை பயன்படுத்தும் கம்மடுவ, நாகல, இங்குருவத்தை 20 ஏக்கர் ஆகிய தோட்டங்களில் வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், இப் பாலம் உடைந்துள்ளதால் வீதியில் பஸ் போக்குவரத்து சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

மீரிகம குருகுல கல்வி நிறுவனத்தில் தரம் 6, 7, மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்கள், ஆங்கில விரிவுரையாளர் திதுல வீரசேகரவின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை மொழியியலாளர்கள் கழகத்தினால் 'ஆங்கிலப் பட்டறை' உட்பட தமது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் அண்மையில் கிறிஸ்துமஸ் தினத்தை கொண்டாடிய போது,.

படங்கள் பூகொட தினகரன் நிருபர்

கலாபூசணம் ரூபராணி ஜோசப் நினைவு விருதும் அழகுக்கலை மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும்

செரின் அழகுக் கலை நிறுவனத்தின் இயக்குனர் திருமதி செரின் ரஞ்ஜித் குமார் அழகு ஒப்பனைக் கலைக்குப் புதியவரல்லர். கடந்த 15 ஆண்டுகளாக இந்தக் கலைத்துறையில் முக்கியமான ஒருவராக விளங்கி வரும் இவர் தையல் கலை, மணப்பெண் அலங்காரம் போன்ற பலதுறைகளில் நிறைந்த ஈடுபாடு உடையவர். அழகுக் கலையில் நிபுணத்துவம் பெற்ற இவரிடம் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் விழா கண்டி ஒக்ரோ ஹோட்டலில் திங்கட்கிழமை 16 ஆம் திகதி பி. ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இம்முறை கலாபூசணம் ரூபராணி ஜோசப் நினைவு விருது தினரகன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவருக்கும் மற்றும் கலாபூசணம் திருமதி ஞானலட்சுமி ஞானசேகரனுக்கும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முக ஒப்பனை, கூந்தல் ஒப்பனை, அணிகலன்கள் ஒப்பனை, நக ஒப்பனை, நறுமணப்பொருள் வண்ணப்பொருள் ஒப்பனை போன்ற பல கலை நுணுக்கங்களை நன்கு கற்றுத் தேறிய செரின் ரஞ்ஜித் குமார் இக்கலை தொடர்பில் இந்தியா, பேங்கொக் போன்ற நாடுகளுக்கும் சென்று பரந்துபட்ட அறிவைப் பெற்றுள்ளார். மென்மேலும் இது தொடர்பில் புதிய புதிய அறிவுத் தேடலை மேற்கொண்டு வரும் ஒருவர். இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கி செவ்வி.

நீங்கள் மலையகத்தில் ஒப்பனை அலங்கார கலைத் திறனில் நீண்ட காலமாக ஈடுபாடுடையவர்கள். இதில் பிரமிக்கத்தக்க ஒருவராக வளர்ச்சி கண்டவர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனினும் இதற்கு ஆரம்பத்தில் தூண்டுகோலாக இருந்தவர்கள் யார் ?

ஆம். நான் 14 வருடங்களாக இந்த அழகியல் அலங்கார ஒப்பனைக் கலையை செய்து வருகின்றேன். இதற்கு ஆரம்பத்தில் தூண்டு கோலாக இருந்தவர் என் தாயார். அவர் மறைந்த எழுத்தாளர் கலாபூசணம் ரூபராணி ஜோசப். அவர் உங்களுக்கு நன்கு தெரிந்தவர். என்னையும் சிறு பராயம் முதல் நீங்கள் நன்கு அறிந்தவர். அம்மா அடிக்கடி சொல்வார். சும்மா இருக்கக் கூடாது. ஏதாவது செய்து முன்னேற வேண்டும். பெண்களைப் பொறுத்தவரையிலும் ஏதாவது சுயதொழில் ஒன்றை கற்றுக் கொள்ளுதல் வேண்டும். காலத்தை வீணாகக் கழிக்கக் கூடாது.அப்பொழுதுதான் குடும்ப பொருளாதாரத்தை ஓரளவு சமாளிக்க முடியும் என்று கூறி என்னை ஏதாவது ஒன்றை செய்யத் தூண்டிக் கொண்டே இருப்பார். அந்த வகையில் வீட்டுக்கு அருகாமையில் கண்டி ஓராபி பாஷா நிலையத்தில் நடைபெற்று வந்த தையல், ஒப்பனை அலங்கார கலையை முதன் முதலில் கற்றுக் கொண்டேன்.

குடும்ப பாரத்தின் சுமையைக் குறைப்பது என்றால் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் ஒரு சுயதொழில் பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் வீட்டில் ஓர்

ஆண் மட்டும் உழைத்து குடும்பம் நடத்துவது இயலாத காரியம். இன்றைக்கு பெண்களும் கட்டாயம் சம்பாதிக்க வேண்டும்.

இலங்கையில் பல்வேறு வகையிலான சுயதொழில் முயற்சிகள் இருந்தாலும். பெண்களைப் பொறுத்தவரையில் மிக இலகுவான அதிக வருமானத்தை ஈட்டக் கூடிய தொழிலாக இந்த மணப்பெண் ஒப்பனை அலங்காரம், தையற் கலை மிகப்பயனுள்ளதாக அமைந்துள்ளது.

நான் கற்ற அந்தக் கலையை மலையகத் தோட்டப்புறப் பகுதிகளிலுள்ள பெண் பிள்ளைகளின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு செரின் அழக்கு கலை நிறுவனம் திறந்து இன்று பரந்து பட்ட அமைப்பில் செயற்பட்டு வருகின்றேன். கண்டி, மாத்தளை, ஹற்றன் போன்ற இடங்களில் இக்கலையை கற்றுக் கொள்வதற்கான பயிற்சி நிலையங்களைத் திறந்துள்ளேன்.

குறிப்பாக மலையகப் பெண்களைப் பொறுத்தவரையில் இத்துறையில் சுமார் 2000க்கு மேற்பட்டோரை பயிற்று வித்து தலைசிறந்த தையல் கலை மற்றும் அழகு ஒப்பனைக் கலைஞர்களாக வெளியேற்றி இருக்கின்றேன். அவை மட்டுமல்ல இத்துறையில் புதிய புதிய விடயங்களைத் தேடிக் கற்று சரியான முறையில் காலத்திற்கு உகந்த பயிற்சிகளை பிள்ளைகளுக்கு வழங்கி வருகின்றேன். இங்கு பயிலும் பிள்ளைகள் யாவருக்கும் அரைகுறையான பயிற்சிகளை வழங்காமல் முழுமையான சீரான முறையில் சிறந்த பயிற்சிகளை வழங்கி தையல் மற்றும் அழகுக் கலைஞர்களாக வெளியேறி வருகின்றேன்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்து தங்கியிருந்து கல்வி கற்கின்ற பிள்ளைகளும் எங்கள் பயிற்சி நிலையத்தில் இருக்கிறார்கள்.

ஜப்பான் நாட்டிலுள்ளவர்கள் ஒன்லைன் மூலமாக இந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுகின்றார்கள். இந்தக் கற்கை நெறியை ஆறு மாத்திலும்,மூன்று மாதத்திலும் நிறைவு செய்ய முடியும். இது அவரவர் வசதிகளுக்கு ஏற்ப நிறை செய்து கொள்ளலாம்.

இப்போது அதிகளவு ஆசிரியைகள் இந்த கலையைக் கற்றுக் கொள்வதில் நாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல வீட்டிலுள்ள தாய்மார்களும் இதன் மூலம் வருமானம் ஈட்டலாம் என்ற நோக்கில் அதிகமானவர்கள் இந்தப் பயிற்சி நெறியைக் கற்றுக் கொள்ள ஆர்வத்துடன் வருகிறார்கள்.

உங்கள் தயாரின் எழுத்துப் பணிகளைப் பற்றி சுருக்கமாகக் கூற முடியுமா?

அவர் மட்டக்களப்பில் பிறந்து மலையகத்தில் கல்விப் பணி, சமூகப் பணி இலக்கியப் பணி என்று சேவையாற்றியவர். அவர் எதையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அவர் ' ஏணியும் தோணியும் ' என்ற சிறுவர் கதைகள் நூலொன்றை வெளிக்கொணர்ந்தார். இந்நூலுக்

கான சாஹித்திய மண்டலப் பரிசு கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் உயிரிழக்கும் வரை தொடர்ந்து இலக்கியப் பணி புரிந்தவர். இவருடைய ஞாபகார்த்தமாக செரின் அழகுக் கலை நிறுவனத்தின் ஊடாக ஒவ்வொரு வருடமும் ஊடகம், இலக்கியம் சார்ந்த பணியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து வருகின்றோம்.

இம்முறை கலாபூசணம் ரூபராணி ஜோசப் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளோர் தொடர்பில்..

ஊடகத்துறைக்கான ரூபராணி ஜோசப் நினைவு விருது தினரகன் நாளிதழ், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இந்து சமயம் தொடர்பில் 11 நூல்களை வெளிக்கொணர்ந்த பிரபல எழுத்தாளர் ஞானசேகரனின் துணைவியார் கலாபூசணம் திருமதி ஞானலட்சுமி ஞானசேகரன் ஆகியோர்களுடன் 34 வருடங்களாக ஊடகத்துறையில் சேவையாற்றி வரும் சமாதான நீதிவானான தேவராஜன் வசந்தகுமார் மற்றும் கவிஞர், இலக்கிய ஆய்வாளரும் ஊடவியலாளருமான இக்பால் அலி ஆகிய நால்வர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள் என்ற செய்தியை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வு தொடர்பில்,...

இந்நிகழ்வு தேசகீர்த்தி சமூகரத்தினம் முத்தையாப் பிள்ளை ஸ்ரீ காந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர். வி. இராதாகிருஷ்ணன் கலந்து கொள்ளவுள்ளார்.வரவேற்புரை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா அ. இராமன், வாழ்த்துரை குண்டசாலை தமிழ் வித்தியாலய அதிபர் எஸ். சிவஞானசுந்தரம்,சிறப்புரை கவிஞர் ரா. நித்தியானந்தன், நன்றியுரை செரின் ரஞ்ஜித் குமார்.

நேர்காணல்
இக்பால் அலி

மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவில்

பால்மா விநியோகத்தில் முறைகேடு ; மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவில் பால்மா விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து நேற்று (10) அப்பகுதி மக்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

மரக்காரம்பளை கிராம சேவகர் அலுவலகம் அமைந்துள்ள மணிபுரம் கிராமத்தில் கிராமசேவகர் அலுவலகத்திற்கு முன்னர் அமைதியான முறையில் போராட்டம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மக்கள்,

அண்மையில் கிராம சேவகரால் பால்மா பக்கற்றுகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் இவை பக்கச்சார்பான முறையில் வழங்கப்பட்டதுடன் தகுதியற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பல குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் வசதியானவர்களுக்கே பால்மா பக்கற்றுகள் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கிராம சேவகரிடம் கேட்டால் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பிரதேச செயலாளரிடம் கேட்டபோது,

வவுனியா பிரதேச செயலக பிரிவில் 36000 குடும்பங்கள் உள்ளன. இதில் 6000 குடும்பங்கள் மிக வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களாக உள்ளனர்.

இந்நிலையில் எமக்கு 1730 குடும்பங்களுக்கு வழங்குவதற்கான பால்மா பொதிகளே கிடைத்தன. இதில் வறிய குடும்பங்களுக்கு வழங்குமாறு கிராம சேவையாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளோம்.

இதில் முறைப்பாடு தெரிவிப்பவர்கள் உண்மையிலேயே வறியவர்களாயின் அதைப்பற்றி தற்போது கூற முடியாது. அவர்கள் என்னிடம் முறைப்பாட்டை தந்தால் அவர்கள் தகுதியானவர்களாக இருந்தும் கிடைக்காவிட்டாலும் தகுதியற்றவர்களுக்கு கிடைத்தாலும் நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்தார்.

வவுனியா கோவில்குளம் இந்துக்கல்லூரி அதிபர் நியமனத்திற்கு பெற்றோர் எதிர்ப்பு

கோவில் குளம் குறூப் நிருபர்

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியில் புதிய அதிபர் நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கோவில்குளம் இந்துக்கல்லூரியில் புதிய அதிபர் நியமனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அமைதியான கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெற்றோர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்துக்கல்லூரிக்கு புதிதாக அதிபராக நியமிக்கப்பட்டுள்ளவர் ஒழுக்கமற்றவர் என்பதுடன் அதிபராக பதவி வகிக்க தகுதியற்றவர், அத்துடன் ஏற்கனவே அவர் ஆசிரியராக பணியாற்றிய பாடசாலையில் சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்குள்ளானவர் என பெற்றோர் தெரிவித்தனர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், 'எல்லா வகையிலும் தகுதியான அதிபர் எமது பாடசாலைக்கு வேண்டும்', 'மாணவர்களை பாதுகாக்கும் மதிப்பு மிக்க அதிபர் வேண்டும்', 'மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் அதிபர் எமக்கு வேண்டாம்', 'வேண்டாம், வேண்டாம் தகுதியற்ற அதிபர் எமக்கு வேண்டாம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் கையெழுத்து பெறப்பட்டு, வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளருக்கு அதிபர் நியமனத்தை நிறுத்துமாறு கடிதமொன்றும் அனுப்பிவைக்கப்பட்டது.

பொலிஸ் சார்ஜன்ட் சடலமாக மீட்பு

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று (10) காலை 6.30 மணியளவில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வீதியில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தாண்டிக்குளத்திலிருந்து புதுக்குளம் செல்லும் பிரதான வீதியில் தாண்டிக்குளம் சந்தியிலிருந்து 500மீற்றர் தொலைவிலுள்ள வளைவிற்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் சடலம் ஒன்று காணப்படுவதாக நபரொருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தினை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

குறித்த மரணத்திற்கு காரணம் விபத்தாக இருக்கலாம் என தெரிவிக்கப்படும் நிலையில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு மருத்துவ உதவிப் பொருட்கள்

சாவகச்சேரி விசேட நிருபர்

சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று 752000.00 ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு வைத்தியசாலை நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கமைவாக ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு 752000.00 ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்கள் வைத்திய அத்தியட்சகரிடம் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

வீட்டுத் தோட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்

யாழ். விசேட நிருபர்

பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் விவசாய ஆர்வத்தினை தூண்டும் வகையில் புதிய வெளிச்சம் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டுத் தோட்ட போட்டியில் வடமராட்சி பிரதேசத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசுத்தொகை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மண்டபத்தில், பாடசாலை அதிபர் T. கலைச்செல்வன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த இயற்கை விவசாய பயிற்றுநர்களான பாமாயன் மற்றும் சுந்தரராமன் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிவைத்தனர்.

விபத்தில் குடும்பஸ்தர் பலி

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை மந்திகை சந்திக்கு அருகில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். புலோலி தெற்கை சேர்ந்த இராசு புவனேஸ்வரன் (வயது 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டிலிருந்து இரவு வேலைக்காக இரவு சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வேலைத்தளத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மந்திகை சந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. அதில் படுகாயமடைந்தவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு, சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் ஒருவர் பலி

நாகர்கோவில் விசேட நிருபர்)

தென்னந் தோட்டத்துக்கு சென்று விட்டு வீடு திரும்பி கொண்டிருந்த வயோதிபர் ஒருவரை ஏ9 வீதி இராமாவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை(09) இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் சங்கத்தானை,சாவகச்சேரியை சேர்ந்த இராஜகாரியன் இலட்சுமி நாதன் (வயது 74) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம்,கொயிலாமனையில் உள்ள தென்னம் தோட்டத்துக்கு சென்று விட்டு இரவு சங்கத்தானையிலுள்ள வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் இடதுபுறமாக வீதியால் சென்று கொண்டிருந்தபோது மதுபோதையில் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதித் தள்ளியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் மயக்கமடைந்த அவர் அவசர ஆம்புலன்ஸ் மூலம் இரவு 9.30 மணியளவில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 10.45 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை(10) காலை 8.00 மணியளவில் அவர் உயிரிழந்தார்.

மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாய பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டார்.

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

விலைக்கோரல் அறிவித்தல் - 2023-01-11

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம்	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	தேவையான விலை மனு பிணை	தேவையான தகைமை	VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா)	தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	இறுதித் திகதி மற்றும் நேரம்
	சிவில் கேள்விகள்						
01	பதியதலாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வடிகட்டி ஊடகத்தை பிரதியீடு செய்தல் மற்றும் வழங்குதல் ஒப்பந்த இல: RSC(E) /AGM(ES) /C/FM/PAD/RH/AMP/2022/39	2,000/- + VAT	ரூபா 20,000/-	கட்டிட நிர்மாணம் / நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C8 மற்றும் C9 தரத்தில் CIDA பதிவு	1.34 மில்லியன்	பி.ஒ.நி. (கிழக்கு தெற்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மாராம மாவத்தை, அம்பாறை. Tele: 063-2223926 Fax : 063-2224975	26/01/2023 பி.ப. 1.00
02	ரம்பே வலயத்தின் குழாய் பதித்தலுக்காக குறுக்கு மதகுகள், அறைகளை நிர்மாணித்தல் மற்றும் அது சார்ந்த வேலைகள் ஒப்பந்த இல: RSC(NW)/DEV/C/UNDP/RAMBE/ 2022/90	6,000/- + VAT **	ரூபா 59,100/-	நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	5.9 மில்லியன்	பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086	01/02/2023 பி.ப. 2.00
	வழங்கல் கேள்விகள்						
03	லக்கல புதிய நகர நீர் வழங்கல் திட்டத்தின் (LNTWSP) கீழ் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல். ஒப்பந்த இல: RSC-C/LNTWSP/SUP/Lab Equipment/LBF/2022/31	6,000/- +VAT **	ரூபா 140,000/-	உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	-	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
04	ஹம்பாந்தோட்டை பிராந்தியத்திற்கு ஆய்வுகூடப் பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: RSC(S)/P&C/S/LAB EQUIPMENT/ H'TOTA/RH/2022-175	6,000/- +VAT **	ரூபா 70,000/-	ஆய்வுட உபகரணங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	6.95 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele : 041-2222105 Fax : 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
2022-12-21ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. ருஹுணுபுர நீர் வழங்கல் திட்டத்திலுள்ள ருஹுணுபுர உள்ளீர்ப்புக்கு Variable Frequency Drives வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: RSC(S)/P&C/S/VSD/ RUHUNUPURA/RH/2022-99 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-01-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.							
2022-12-21ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. 1000 தொன் பொலி அலுமினியம் குளோரைட் வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: SUP&MM/CHEM/PAC-06/2022/15- இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-01-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.							
	M & E கேள்விகள்						
05	குருநாகல் மாவட்டத்திலுள்ள நீர் வழங்கல் திட்டங்களுக்கு Submersible Borehole Type பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல். ஒப்பந்த இல: **RSC (NW)/M-KURU/P/RH/KURU-DIST/2022/77**	12,500/- + VAT **	ரூபா 200,000/-	ஆவணத்தின் பிரகாரம் நீர்ப் பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	19.91 மில்லியன்	பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele : 037-2223158 Fax : 037-2230086	01/02/2023 பி.ப. 2.00
06	அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள ஆய்வுகூடத்திற்கு வளிச் சீராக்கி அலகுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RPC/WP/W/AMB/M&E/RETDOK/2022/48**	6,000/- + VAT **	ரூபா 61,000/-	வளிச் சீராக்கி அலகுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் (விலைக் கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும்போது சமர்ப்பித்தல் வேண்டும்)	6.1 மில்லியன்	பிரதிப் பொது முகாமையாளர் (மேற்கு உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele : 0112418532 Fax : 0112549199	01/02/2023 பி.ப. 2.00
	சேவைக் கேள்விகள்						
07	அம்பலாங்கொட பிரதேச பொறியியலாளர் பிரதேசத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: RSC(S)/P&C/ J/A'GODA A.E AREA/O&M/ 2022-133R	6,000/- + VAT **	ரூபா 61,110/-	ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபாரப் பதிவு ஒழுங்குவிதியின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	6.11 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele : 041-2222105 Fax : 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
08	இரத்தினபுரி, புதிய நகரிலுள்ள பிராந்திய ஒத்துழைப்பு நிலைய (சபரகமுவ) அலுவலகக் கட்டிடத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: RSC(SAB)/P&D/OFFICE/ JANITORIAL/O&M/2022/45	6,000/- + VAT **	ரூபா 92,000/-	ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபாரப் பதிவு ஒழுங்குவிதியின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	6.12 மில்லியன்	பி.ஒ.நி. (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி. Tele : 045-2228274-6 Fax : 045-2228273	25/01/2023 பி.ப. 2.00
	வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்						
09	தெஹிவளை முகாமையாளர் அலுவலகத்திற்கு வேன் (Dual A/C) ஒன்றையும் இரண்டு எண்ணிக்கையான டபல் கெப்களையும் வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: W-S/P&C/H(04)/DEHI/O&M/2022/48	4,000/- + VAT	பற்றுச்சீட்டு இல 01- ரூபா 14,550/- பற்றுச்சீட்டு இல 02- ரூபா 14,250/- பற்றுச்சீட்டு இல. 03- ரூபா 13,500/-	ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மேற்கு - தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/0112637947	26/01/2023 மு.ப. 10.00
10	பொறுப்பதிகாரிக்கு க்றூ கெப் ஒன்று (பயாகல), பொறுப்பதிகாரிக்கு க்றூ கெப் ஒன்று (களுத்துறை), பொறுப்பதிகாரிக்கு க்றூ கெப் ஒன்று (பிலமினவத்த) மற்றும் பொறுப்பதிகாரிக்கு க்றூ கெப் ஒன்றை (வாத்துவ) வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **W-S/P&C/H(10)/KAL/O&M/2022/54**	4,000/-+ VAT	பற்றுச்சீட்டு இல. 01- ரூபா 16,200/- பற்றுச்சீட்டு இல. 02- ரூபா 16,050/- பற்றுச்சீட்டு இல. 03- ரூபா 16,050/- பற்றுச்சீட்டு இல. 04- ரூபா 16,200/- பற்றுச்சீட்டு இல. 05- ரூபா 16,200/- பற்றுச்சீட்டு இல. 06- ரூபா 16,200/-	ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மேற்கு - தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/0112637947	26/01/2023 மு.ப. 10.00
11	தெஹிவளை பிராந்தியத்திற்கு பெக்கோ லோடரை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **W-S/P&C/BACKHOE (03)/DEHI/O&M/2022/73**	4,000/- + VAT	ரூபா 49,500/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மேற்கு - தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/0112637947	26/01/2023 மு.ப. 10.00
12	பொறுப்பதிகாரிக்கு (தெஹிவளை) க்றூ கெப் ஒன்றையும் மற்றும் பொறுப்பதிகாரிக்கு (பயாகல) க்றூ கெப் ஒன்றையும் வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **W-S/P&C/H(01)/DGM/O&M/2023/02**	4,000/- + VAT	பற்றுச்சீட்டு இல. 01- ரூபா 13,650/- பற்றுச்சீட்டு இல. 02- ரூபா 16,200/-	ஆவணத்தின் பிரகாரம் மற்றும் வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மேற்கு - தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/0112637947	26/01/2023 மு.ப. 10.00
13	மத்திய தெற்கு பிரதேச முகாமையாளருக்கு 03 எண்ணிக்கையான முச்சக்கர வண்டிகளை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/ CS/2022/211**	2,000/- + VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
14	உலப்பனை பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/ CS/2022/212**	2,000/- + VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
15	வெலம்பொட பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/CS/ 2022/213**	2,000/- + VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
16	ஹட்டன் பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/CS/ 2022/214**	2,000/- + VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
17	பூண்டுலோயா பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/CS/ 2022/216.**	2,000/- + VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
18	மத்திய வடக்கு பிராந்திய முகாமையாளருக்கு 03 எண்ணிக்கையான முச்சக்கர வண்டிகளை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/ 2022/217	2,000/- + VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00

19	தம்புல்ல பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/ 2022/218	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
20	மாத்தளையிலுள்ள பிராந்திய அலுவலகத்திற்கு இரண்டு எண்ணிக்கையான முச்சக்கர வண்டிகளை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/2022/219	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
21	கலகெதர பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/ 2022/221	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
22	அம்பிட்டிய பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CE/ 2022/222.	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
23	அரட்டன பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CE/ 2022/223.	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
24	மெததும்பர பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CE/ 2022/224.	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
25	வலப்பனை பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CE/ 2022/226	2,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 5,350/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
26	தம்புள்ள மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்திற்கு வேன்களை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/O&M/CN/ 2022/285	4,000/-+ VAT	ஒரு வாகனத்திற்கு ரூபா ரூபா 8,600/-	வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027	25/01/2023 பி.ப. 2.00
27	வவுனியா - பிராந்திய ஒத்துழைப்பு நிலையம், பிஒநி (வடக்கு) பிரதிப் பொது முகாமையாளருக்கு (வ) வாகனமொன்றை (கார்) வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC/N/DGM/O&M/Hiring Vehicle (Car)/2022/060	4,000/-+ VAT	ரூபா 25,000/-	2018 அல்லது அதற்கு பின் பதிவுத் திகதியைக் கொண்டிருத்தல், வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம்	பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341	01/02/2023 பி.ப. 2.00
28	களனி பிராந்தியத்திற்கு 02 எண்ணிக்கையான வேன்களை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/ 2022/55R	4,000/-+ VAT	ரூபா 19,500/-	ஆவணத்தின் பிரகாரம்	பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146	25/01/2023 மு.ப. 10.00
29	அக்மீமன நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(S)/P&C/HIRING/ THREEWHEELER/AKMEEMANA/O&M/2022-185	2,000/-+ VAT	ரூபா 15,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele:041-2222105 Fax 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
30	பலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு பெந்தோட்ட பிரதேச பராமரிப்பு வேலைகளுக்காக முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(S)/P&C/ HIRING/BENTOTA/ THREE WHEELER/O&M/2022-186	2000/-+ VAT	ரூபா 15,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele:041-2222105 Fax 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
31	சூரியவெவ நீர் வழங்கல் திட்டத்திற்கு மினி டிரக் ஒன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(S)/P&C/ SOORIYAWEWA/ HIRING/MINI TRUCK/O&M/2022-178	4,000/-+ VAT	ரூபா 12,250/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele:041-2222105 Fax 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
32	பலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(S)/P&C/ BALAPITIYA/ HIRING/ THREE WHEELER/O&M/2022-184	2,000/-+ VAT	ரூபா 15,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele:041-2222105 Fax 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
33	கதிர்காமம் நீர் வழங்கல் திட்டத்திற்கு மினி டிரக் ஒன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(S)/P&C/HIRING/MINI TRUCK/ KATARAGAMA/O&M/2022-187	4,000/-+ VAT	ரூபா 12,250/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele:041-2222105 Fax 041-2221329	25/01/2023 பி.ப. 2.00
34	திஸ்ஸ, கிரிந்த, பூந்தல நீர் வழங்கல் திட்டத்திற்கு மினி டிரக் ஒன்றை வாடகைக்கமர்த்துதல். ஒப்பந்த இல: RSC(S)/P&C/ TISSA, KIRINDA, BOONDALA/ HIRING/MINI TRUCK/O&M/ 2022-177	4,000/-+ VAT	ரூபா 12,250/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை Tele : 041-2222105 Fax : 041-2221329	25/01/2023 பி.ப. 2.00

காணிக் கேள்விகள்

2022-12-21ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. குருநாகல், பரந்தனையிலுள்ள தேநீவவ சபைக்குச் சொந்தமான காணிகளை விற்பனை செய்தல் ஒப்பந்த இல : ADDLGM(CAM)/LAND SALE/NW/2022/01 - - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-02-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி நீடிக்கப்பட்டுள்ளது மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடமானது குருநாகல், தம்புல்லை வீதி, தேநீவவச, பிஒநி (வடக்கு - மேற்கு) அலுவலகம் மற்றும் இரத்மலானை, காலி வீதி, தேநீவவச, தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு என்பனவாகும்.

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

தலைவர்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

பெறுகை அறிவித்தல்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாண, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் , கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

ஆய்வுகூடத்திற்கான வடிகட்டும் தாள் மற்றும் கோ/பெரல் கொள்வனவு செய்தல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆய்வுகூடத்திற்காக வடிகட்டும் தாள் மற்றும் கோ பெரல் கொள்வனவு செய்தல் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி சுருக்கம்

கேள்வி இலக்கம்	விபரம்	100 mm diam-eter core Bits	Filter Paper	கேள்விப் படிவக் கட்டணம் (அதிகார சபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து)	கேள்வியின் பெறுமதி		கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்
					காசாக	வங்கிப் பிணை மூலம்	
PRDA/ WP/PRO/ 2023/01	ஆய்வுகூடத்திற்கான வடிகட்டும் தாள் மற்றும் கோ பெரல் கொள்வனவு செய்தல்	55	300	ரூ.1000.00 + Vat	ரூ.30,000.00	ரூ.60,000.00	2023.01.27 2.30 Pm

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.01.11 முதல் 2023.01.26 வரை மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறி காசாக அல்லது வங்கிப்பிணை முறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023.01.27 பி.ப.2.30 இற்கு முடிவடைவதுடன் கேள்விகளை திறத்தல் அன்றே அந்த நேரத்திலேயே இவ் அலுவலகத்தில் நடைபெறும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

தலைவர்
பெறுகைக்குழு,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)
இலக்கம் - 59, சென் செபஸ்தியன் மேடு,
கொழும்பு - 12
தொலைபேசி இலக்கம் - 0115676903.

ஏலத்திற்கான அறிவிப்பு

அப்புத்தளை பிரதேச சபை

பாவனையில் அகற்றப்பட்ட வாகனம் விற்பனை செய்தல்

அப்புத்தளை பிரதேச சபை கொள்முதல் குழு மூலம் அப்புத்தளை பிரதேச சபைக்கு உரிய பாவனையிலிருந்து அகற்றிய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தினை விற்பனை செய்ய 2023.02.01 அன்றைய தினம் பி.ப. 2.00 மணி வரையில் விலைக்கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படும்.

இல	பதிவு இல	வாகன வகை	மீள செலுத்தப்படாத தொகை	மீள செலுத்தும் தொகை
01	UP PB-8665	Double cab /Micro SsangYong/Actyon sports 200XDI	500.00	5000.00

2023.01.11ம் திகதி முதல் 2023.01.31 வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இவ் வாகனத்தினை கொள்வனவு செய்ய எதிர்ப்பார்த்துள்ளவர்கள் வெவ்வேறாக மேல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீள செலுத்தப்படாத மற்றும் மீள செலுத்தப்படும் ஏல கட்டணமான ரூ. 5500.00 தொகையினை அப்புத்தளை பிரதேச சபைக்கு செலுத்திய பின்னர் வாகன கொள்வனவு விண்ணப்ப படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தினை 2023.01.11ம் திகதி முதல் 2023.01.31 வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் நிறுவனத்தினுள் பரிசீலனை செய்ய முடியும். முறைப்படி பூரணப்படுத்தப்பட்ட ஏல படிவமானது 02 பிரதிகளுடன் கொள்முதல் குழுவிற்கு 2023.02.01 ம் திகதி பி.ப. 2.00 வரையில் முன்வைக்க முடியும். விலைக்கணக்குகளின் மூலப்பிரதி மற்றும் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறாக எழுதி உறையிட்டு, அவ் இரு உறைகளையும் ஒரு கடித உறையில் இட்டு அவ் உறையில் இடதுபக்க மூலையில் “பாவனையில் அகற்றப்பட்ட வாகனத்தினை ஏலம் விடுதலுக்கான விலைக்கணக்குகளை முன்வைத்தல்” என குறிப்பிட்டு, முத்திரையிட்டு தவிசாளர், கொள்முதல் குழு, அப்புத்தளை பிரதேச சபை, தியத்தலாவ எனும் விலாசத்திற்கு பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டும், அல்லது இவ் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள ஏல பெட்டியில் இட வேண்டும். மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள அப்புத்தளை பிரதேச சபையின் தொலைபேசி இலக்கமான 0572229075 க்கு அழைக்கவும் அல்லது **hapuprasa@yahoo.com** இணைய விலாசத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

- பிரதிகளில் அனைத்து பக்கங்களும் மூலப்பிரதியினது சான்றழிக்கப்பட்ட நகல்களாக இருக்க வேண்டும்.
- 2023.02.01ம் திகதியன்று பி.ப. 2.30 மணியளவில் அப்புத்தளை பிரதேச சபை கொள்முதல் குழு முன்னிலையில் விலைக்கணக்குகள் திறக்கப்படுவதுடன், இவ் சந்தர்ப்பத்தில் ஏலதாரர் அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு பங்கு கொள்ள முடியும்.
- விலைக்கணக்குகளை ஏற்றுக்கொண்டதாக குறிப்பிட்ட தரப்பினருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும், அவ் கடிதம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பெறுமதி தொகையினை செலுத்தி வாகனத்தினை குறிப்பிட்ட நிறுவன சூழலிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மீள செலுத்தபடும் தொகையானது செலுத்தப்பட மாட்டாது.
- பூரணமற்று முன்வைக்கப்படும் அல்லது தாமதமாக கிடைக்கப்பெறும் விலைக்கணக்கு பத்திரங்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன், கொள்முதல் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

தவிசாளர்,
கொள்முதல் குழு
அப்புத்தளை பிரதேச சபை.

சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்

106



கார்கள் விற்பனைக்கு

SG GE-9509 KIA Sephia Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001900

WP CAG-6859 Tata Nano Twist Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001959

WP KP-0827 Tata Nano Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001972

65 - 4206 Toyota Corona Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001872

108

நிஸான் கார் விற்பனைக்கு

UP HN-9818 Nissan March Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001951

WP GA-0633 Nissan Primera Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001961

WP GI-6678 Nissan Sunny Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும. 001963

65 - 7218 Nissan Sunny Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001873

113

சுசுகி கார்கள் விற்பனைக்கு

SP CAZ-0324 Suzuki Swift Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001921

117

வேன்கள் விற்பனைக்கு

525613 Toyota Townace 1987 Van கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 001918

118

ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு

SG PS-3376 Toyota Hilux Vigo S/Cab அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001917

SP HA-3678 Nissan X Trail Jeep அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001928

119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP LE-5324 tata LPT 1109 F/B Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001874

CP ZA-0243 JCB 3CX Backhoe Loader அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001875

DAB-6781 Tata Super-ace 2015 Lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 001923

GG-8912 Mitsubi-shi Canter 1995, Lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714542958. 001914

NC LH-9878 Lanka Ashok Leyland 1613 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001880

NC LI-8139 Tata LPK 409 Dump Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001881

NP PT-1855 Tata 207 S/Cab Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001883

NP PX-8664 Tata Super Ace Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001885

NP ZA-7466 JCB 3CX Bachoe Loader அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001888

NW LA-3596 Lanka Ashok Leyland Comet அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001891

NW LA-8734 Mitsubishi Mini Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 001894

